# சிவாலய வழிபாடு

# சிவாலய வழிபாடு

*With the*

*benign blessings of their*

*Holiness of*

**SRI KANCHI KAMAKOTI PITHAM**

*on the sacred occasion of the*

*NINTH CHATURMASYAKALA*

## BIKSHAVANDANAM

*of*

SKKPVB TRUST

*at Chandrasekharapuram*

*Enathur*

*on* 18–8–96

வெளியீடு:
பவானி புக் சென்டர்
19, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

வெளியீடு : மே: 1996

ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ்
158, லேக் வியூ ரோடு,
சென்னை - 600 033.

உ

ஸ்ரீ ஶிவாப்யாம் நம:

# சிவாலய வழிபாடு.

## அவதாரிகை.

---

அவனியில் ஆயிரக்கணக்கான ஜீவராசிகளைக் காண்
கிறோம். ஒன்றைவிட ஒன்று ஒருவகையில் சிறந்ததாகக்
காணப்படுகிறது. இவை உத்பிஜம், ஸ்வேதஜம், அண்ட
ஜம், ஜராயுஜம் என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்
டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த பேதங்
களுள. எண்பத்துநான்கு லக்ஷம் பேதமுள்ள ஜீவராசி
களிருப்பதாக நமது பண்டைய நூல்கள் கூறுகின்றன.
இவைகளில் உருவ அமைப்பில் பெரும்பாலானவை ஏதே
னும் ஒருவகையான குறைபாடுள்ளவைகளே. மானிடப்
பிறவி ஒன்றே பூமியில் குறைவற்ற பிறப்பு.

ஒரு வைஶ்யன் தேர்மீதேறிச்செல்ல, அந்தத் தேரினுல்
கீழே தள்ளப்பட்ட காஶ்யபர் எனும் ஒரு முனிவர் தான்
ஏழையாயிருந்ததால் இந்தகைய துன்பமேறபட்டது.
ஏழை இருப்பதைவிட இறப்பதே மேல் என உயிரை விட
ப்ராயோபவேசம் செய்தார். நரிவேட மெடுத்து வந்த
தேவேந்த்ரன் அவரை அணுகி, அரிது அரிது மானிடராத
லரிது, மானிடனுக்கு எண்ணியதைப் பேசவாயுண்டு.
நினைத்த வேலையை முடிக்கக் கைகளுண்டு. மற்றும் பல
ஸௌகர்யமுண்டு. ம்ருகங்கள் எத்தனை உயர்ந்ததாயி
னும் இந்த ஸௌகர்யங்களில்லையே. அநியாயமாக இந்த
உயர்ந்த உடலை விடலாமா? என உபதேசித்தார் என
பாரதம் கூறுகிறது.

### எதனுல் மானிட உடல் சிறந்தது ?

விலங்கினத்தைச் சேர்ந்த சில பிராணிகளின் தோல்,
சிலவற்றின் எலும்பு, சிலதின் மயிர், சிலதின் நகம், சில
தின் மாம்ஸம் பலருக்குப் பயன்படுகின்றது. பவித்ர
மென்றும் தர்ம நூல்களால் வர்ணிக்கப்பட்டு, பகவானை

ஆராதிக்கப் பயன்படுகின்றன. மனிதன் உடலோ உயிரிழந்தபின் நாற்றமெடுத்து ஒரு வேலைக்கும் பயன் படாததுடன் தீண்டினால் தீட்டெனவும் கூறப்படுகிறது. நாறுகிறது. அங்ஙனமிருக்க

**जन्तूनां नरजन्म दुर्लभं**-ஜந்தூநாம் நரஜந்ம துர்லபம்

பிராணிகளுக்கு மானிடப் பிறவி கிட்டாதது என ஸ்ரீ சங்கர பகவத் பாதாளும் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது அரிதுகாண்" என தாயுமானவர் எனும் மாத்ருபூதேசரும் மற்றும் பலரும் எங்ஙனமிதைப் போற்றிப் புகழ்கின்றனர் ? எனில்

**आहार निद्राभयमैथुनं च सामान्यमेतत्पशुभिर्नराणां ।**
**ज्ञानं हिं तेषां अधिकोहिशोभते ज्ञानेन हीनाः पशुभिस्समानाः ॥**

ஆஹார நித்ராபயமைதுனம்ச
ஸாமான்யமேதத்பஶுபிர்நராணாம் |
க்ஞானம் ஹிதேஷாம் அதிகோஹிஶோபதே
க்ஞாநேநஹீநா: பஶுபிஸ்ஸமாநா: ||

உண்ணுதல் உறங்குதல் அச்சம் காமம் இவை எல்லா ப்ராணிகளுக்கும் பொதுவானவை. மனிதருக்கு க்ஞாநம் ஒன்றுதான் அதிகமாக விளங்குவது. அதில்லாதவர் பசுவுக்கொப்பாவார் என பர்த்ருஹரி கூறுகிறார்.

"அறிவு என்பது மோக்ஷ ஸாதனமான க்ஞாநமேயாம். சில்பம் சாஸ்த்ரம் முதலிய அறிவுகள் விக்ஞாநமெனப்படும்" என நிகண்டு கர்த்தாவான அமரஸிம்ஹர் கூறுகிறார்.

**॥ मोक्षेधीर्ज्ञानमन्यत्र विज्ञानं शिल्पशास्त्रयोः ॥**

மோக்ஷேதீர் க்ஞானம் அன்யத்ரவிக்ஞானம்
ஶில்ப ஶாஸ்த்ரயோ:

ஆதலின் பிறப்பு இறப்பெனும் பெரும் பிணியை அகற்றிப் பேரின்பத்தை ஊட்டும் வேதாந்த அறிவினால் தான் மானிடருக்கு உயர்வென ஸித்தமாகிறது.



### வேதாந்தம் கூறுவதென்ன ?

வேதத்தின் முடிவு வேதாந்தம். அது உபநிஷத் எனப்படும். நாம் அநாதியான அவித்யா வாஸனையால் "பரமாத்மாவை விட நாம் வேறு, நமக்கு ஜீவனெனப் பெயர். நாம் ஸ்வல்ப அறிவுள்ளவன். கர்மாவுக்கேற்ற உடலை எடுப்பவன். கர்மபலனை அனுபவிக்க ஸ்தூல உடலை விட்டு ஸூக்ஷ்ம உடலோடு லோகாந்தரம் செல்லுபவன். புண்ய பாபமானவுடன் அவனியில் பிறந்து அல்லல்படுபவன்" என நினைக்கிறோம். இதே அக்ஞாநம். ப்ரும்மம் ஒன்றுதான் ஸத்யவஸ்து. மற்றவை கல்பிதம் என்ற அறிவில்லாமையே அக்ஞாநமாம்.

**ज्ञानाज्ञाने पदार्थौ द्वौ आत्मनोमुक्तिबन्धदौ ।**
**ज्ञानान्मुक्तिर्निबन्धोन्यादिति वेदान्तडिंडिमः ॥**

க்ஞாநாக்ஞாநே பதார்த்தௌ த்வௌ
ஆத்மநோ முக்தி பந்ததௌ |
க்ஞாநாந்முக்திர் நிபந்தோந்யாத்
இதி வேதாந்த டிண்டிம: ||

க்ஞாநம் அக்ஞாநமென இருபொருள்கள் ஆத்மாவிற்கு முக்தியையும் பந்தத்தையுமளிப்பன. ஞாநத்தால் மோக்ஷம், அக்ஞாநத்தால் பந்தம் என வேதாந்த டிண்டிமம் எனும் நூல் கூறுகிறது.

ஞாநத்தினால்தான் மோக்ஷம். மோக்ஷத்தினால்தான் பிறப்பு இறப்பில்லாமை யாகும். க்ஞாநம் எனப்பேசுவது ஸுலபம். அதை அனுபவத்திற்குக் கொண்டுவருவது துர்லபம். வேதாந்தம் கூறும் ஞாநத்தை அடைவதற்காகவே வேதம் கர்மகாண்டத்தைக் கூறுகிறது.

### பிரும்ம ஸ்வரூபம் எத்தகையது ?

**चिन्मात्रं सर्वगं सत्यं संपूर्णं सुखमद्वयं ।**
**सांक्षाद्ब्रह्मैव नान्यदिति तत्वविदां स्थितिः ॥**

சின்மாத்ரம் ஸர்வகம்ஸத்யம்ஸம்பூர்ணம் ஸுகமத்வயம் |
ஸாக்ஷாத் ப்ரம்மைவநான்யதிதி தத்வவிதாம் ஸ்திதி: ||

"சின்மாத்ர மானது எங்கு முளது. ஸத்பமானது. ஸம்பூர்ண ஸுகமானது. இரண்டற்றது. அத்தகைய ஸாக்ஷாத் ப்ரும்ம ஸ்வரூபனே நான். வேறல்ல என தத்து வித்துக்கள் நிலை" என்ற **ஸூத ஸம்ஹிதை** ச்லோக மானது பரமாத்மாவின் ஸ்வரூபமிது என அனுபவிகளின் நிலையை விளக்கும் வகையில் வர்ணிக்கிறது. இது உபநிஷத் கூறிய ஸ்வரூப லக்ஷணமாம். **विश्वस्य जगत: कर्ता** விச்வஸ்ய ஜகத: கர்த்தா - ஸகல ஜகத்திற்கும் கர்த்தா என்பதும் **जन्माद्यस्य यतः** ஜன்மாத்யஸ்ய யத: என்பதும் தடஸ்த லக்ஷணமாம்.

அன்றியும் அது ஆத்மா, ப்ரத்யகாத்மா பரப்ரும்மம், நித்யம், நிர்மலம், சுத்தம், அத்விதீயம், அகர்தா, அபோக்தா, அணுவில் அணு, பெரிதில் பெரிது, ஆநந்த கநம், அநந்தம், ஸத்யம், நிர்குணம், சாந்தம், நாமரூப மற்றது முதலிய சொற்களால் வர்ணிக்கப்படுகிறது. இவைகள் தான் உண்மையான ஆத்ம ஸ்வரூப லக்ஷணங் கள். அப்படி அதை உபாஸித்து உண்மையான க்ஞாநம் பெற்றவனுக்கே பிறப்பும் இறப்பும் அகலும். மோக்ஷம் கிட்டும்.

ஸகுணமானதேன் ?

பரமாத்மா லீலையாக உலகைப் படைக்க எண்ணிய போது, கார்யத்திற்காக கல்பிதமான பல நாமரூபங்களை ஏற்கிறார். ஜன்மாந்த்ர ஸுக்ருதத்தினாலும் ஈச்வர பூஜா பலத்தினாலும் பாபகர்மங்கள் அழிந்ததனாலும் இவ் வேதாந்த வாஸனை தோன்றி நித்யாநித்ய வஸ்து விவேகம், இஹாமுத்ரார்த்த பல போக விராகம், சமாதி ஷட்கம், முமுக்ஷுதை என்ற ஸாதந சதுஷ்டயங்களை அடைந்து ஸதாசார்யனைப் பெற்று தத்வ விசாரம் செய்து ஸமாதி யிலமர்ந்தவர்க்கே அகண்டாகார ஸச்சிதாநந்த நிர்க்குண ஸ்வரூபம் தோன்றும். த்வைத ப்ரபஞ்சத்தி லுள்ளோ ருக்கு அது ஸாத்யமன்று. ஆதலால் கருணாமூர்த்தியான பகவான் பக்தர்கள் தன்னை உபாஸிக்கும் பொருட்டு திவ்ய மங்கள சரீரத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்.



**अनुग्रहाय भक्तानां स्वेच्छया गृह्णते तनुं** — அநுக்ரஹாய பக்தாநாம் ஸ்வேச்சயா க்ருஹ்ணதேதநும்–என்றவாதுல சூத்தமெனும் ஆகம நூல் இந்த தத்துவத்தையே வெளி யிடுகிறது.

கர்மிகள், பக்தர்கள் அல்லது உபாஸகர்களான ஜீவராசிகள் அனைவரும் வேதாந்த விஷயத்தில் சிறுவர் களே யாவர். ஆரம்பதசையில் அகண்டாகார நிர்க்குண வஸ்துவை த்யாநம் செய்ய அவர்களால் முடியாது. சிறு வர்களுக்கு அக்ஷரமான வஸ்துவைக் கல்விக்கும் வித்யாப் யாஸ ஆரம்பத்தில், க்ஷரமான அக்ஷரங்கள் (எழுத்துக் கள்) கற்பிக்கப்படுகின்றன. எண் எனும் கணக்கிலும் கூட்டல் கழித்தல் கற்பிக்கும்போது முதலில் பழமல்லது புளியங்கொட்டைகளை வைத்துக்கொண்டு இந்த நாலு பழங்களுடன் மூன்று பழம் சேர்த்தால் எத்தனை ? ஏழு பழங்களில் இரண்டு அவனுக்குக் கொடுத்தால் மிகுதி எத் தனை ? என கற்பிக்கப்படுகிறது. இங்ஙனம் ஆதியில் கற்ற ஒருவன் பின்னர் "அ" என்ற அவரவர் பாஷையில் எழுதுகிறான். அக்ஷரமல்ல. அ க்ரந்தத்தில் வேறு. நாகரத் தில் தெலுங்கில் மலையாளத்தில் வேறாக எழுதப்படுகிறது. ஆனால் ஒலிவடிவமாக இருக்கிறதே அக்ஷரம். நாம் நமது பாஷையில் ஆரம்பத்தில் எழுதியதே அக்ஷரம். மற்றது "அக்ஷரமென்பதில்லை" என்ற அறிவு வயதும் அனுபவ மும் வந்தவருக்கு; தோன்றும்.

அதேபோல் ஆரம்ப தசையில் ஏதேனும் ஓர் ஸகுண மூர்த்தியை உபாஸிப்பவர் பின்னர் அகண்ட ரூபமான நிர்க்குண ப்ரும்ம உபாஸனையில் சுலபமாக ஈடுபடுவர். இந்த தத்வம் :

**॥ सगुणे सम्यगभ्यस्ते निर्गुणे पर्यवस्यति ॥**

ஸகுணே ஸம்யகப்யஸ்தே நிர்குணே பர்யவஸ்யதி.

ஸகுணத்தை நன்கு அப்யஸித்தால் அது நிர்குணத் தில் முடியும் என்ற வாக்யத்தால் நன்கு விளங்குகிறது. நிர்க்குணோபாஸகர்களுக்கு நாம ரூபங்களனைத்தும் கல் பிதமென்பது ஸ்பஷ்டமாகும்.

வாய்ப் பேச்சுடனோ புத்தகப் படிப்புடனோ நிற்காமல் ஸ்வானுபவத்திற்கு இந்த தத்துவத்தைக் கொண்டுவர விரும்புவோருக்குக் கருணாமூர்த்தியான கைலாஸநாதன் ஆதி சங்கர குருவாகத் தோன்றி, அருள்புரிந்த நூற்றுக் கணக்கான நூல்களிலே **ப்ரபோத ஸுதாகர** மெனும் அரிய நூலில் ஸகுண நிர்குணைக்யம் என்ற ப்ரகரணத்தில் முப்பத்திமூன்று ஶ்லோகங்களால் இந்த தத்துவத்தை விளக்குகிறார்.

**श्रुतिभिर्महापुराणैः सगुणगुणातीतयोरैक्यम् ।**
**यत्प्रोक्तं गूढतया तदहं वक्ष्येति विशदार्थं ॥**

*ஶ்ருதிபிர்மஹாபுராணை: ஸகுணகுணாதீதயோரைக்யம் |*
*யத்ப்ரோக்தம் கூடதயா ததஹம்வக்ஷ்யேதிவிஶதார்த்தம்||*

ச்ருதிகளாலும் மஹா புராணங்களாலும் கூறப்பட்ட ரஹஸ்யமான ஸகுண நிர்க்குண ஐக்யத்தை ஸ்பஷ்டமாகக் கூறுகிறேன். (ப்ரபோத ஸுதாகரம் 194 சு.)

### ஸகுணமும் பலவாக இருப்பதேன் ?

நமது வைதிக மதத்தில்தான் மிகச்சிறந்ததான விக்ரஹாராதன மார்க்கம் காட்டப்பட்டது. ஏன்? நாதவடிவமான நிர்க்குண பரமாத்ம ஸ்வரூபம் ஸங்கீத கலையில் ஓர் ராகாலாபநத்திற் கொப்பாகும். ஸகுண ஸ்வரூபம் கீர்த்தனை பாடுவது போலாம். கேவல ராகாலாபநம், ஸாமான்யரது மனதைக்கவராது. ராக க்ஞாநமுள்ள சிலரே அதன் ரஸத்தை உணர்வர். நிர்க்குண ப்ரும்ம ஸ்வரூபத்தைக் கோடியிலொருவரே ரஸிப்பர். கீர்த்தநம் பாடும்போது பக்கவாத்யக்காரர் கூடவே பாடுவர். பலர் தாளம் போடுவர். பலர் தலை ஆடும். பலர் பலே பலே என்பர். ஸகுணமூர்த்தியான விக்ரஹத்தை நன்கு நகைகளாலும் புஷ்பங்களாலுமலங்கரித்து வாத்யம் நாட்டியம் பாராயணம் இவைகளுடன் வீதிப்ரதக்ஷிணம் செய்வித்தால் பலர் ஸந்தோஷிப்பர். தர்சிப்பர்.

**அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில்,** பரா, வ்யூஹ, ஹார்த்த, விபூதி, அர்ச்சா என, பரமாத்ம ஸ்வரூபம் ஐந்தாக வர்ணிக்கப்படுகிறது. பரா, என்பது பரப்ரும்மம். வ்யூஹம்



லோக கார்யத்திற்கான ஸகுணமூர்த்திகளின் பிரிவு. ஹார்த்தமென்பது ஸகல ப்ராணிகளது உள்ளத்திலுள்ளதாம். விபூதி என்பது அவதாரமாம். அர்ச்சா என்பது ஆலயத்திலுள்ள மூர்த்திகளாம். அதிகாரிகளுக்கேற்றபடி, ஒன்றான வஸ்து பலவாக வர்ணிக்கப்படுகிறது.

'' அவனே ப்ரும்மம். அவனே சிவன். அவனே ஹரி. அவனே இந்த்ரன். அவனே அக்ஷரன். அவனே பரமன். ஸ்வராட்'' என்றும், ''நீ யக்ஞும், நீ வஷட்காரம், நீ இந்த்ரன், நீ ருத்ரன், நீ விஷ்ணு, நீ ப்ரும்மம். நீ ப்ரும்மா.'' (அருணம்) என்றும், அநேக ஶ்ருதிகள் ஒரே வஸ்து பலவாக வர்ணிக்கப்படுகிறது.

**भिन्नरुचिर्हिलोकः** *பின்னருசிர்ஹிலோக:*

உலகம் வெவ்வேறான ருசி உள்ளது என காளிதாஸன் கூறுகிறபடி ''யார் யாருக்கு எங்தெந்த மூர்த்தி பிடிக்கின்றதோ அவரவர், (தத்தம் குலதேவதையை விடாமல்) அதைப் பூஜிக்கலாம்'' என பகவான் அருள் புரிந்தார்.

**यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।**
**तस्यतस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहं ॥**

*யோயோயாம் யாம்தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி*
*தஸ்யதஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ||*
*[பகவத்கீதா.]*

ஸ்ரீ லீலாசுகர் எனும் கிருஷ்ண கர்ணாம்ருத நூலாசிரியர் தான் ஶைவன் பஞ்சாக்ஷரீஜப பராயணன். எனினும் கண்ணனே தன் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறான் என்கிறார். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் இருமூர்த்திகளும் எனக்கு ஸமானமாயினும், பாலசந்த்ரனே என் மநதைக் கவருகிறான் என்கிறார். ஓர் பக்தர் ராமனைக் கிருஷ்ணனாக வரச்செய்து ஆநந்தித்தார். ஜாம்பவான் கண்ணனை ராமனாகச்செய்து தர்சித்தார். ஓராழ்வார் ரங்கனைப்பாடிய வாயால் குரங்கனைப்பாடேன் என்றார். ஒருவர் சிவனைப் பாடிய வாயால் குஹனைப் பாடேன் என்றார்.

ஆனால் அவரவர் குலதேவதையைக் கைவிடக் கூடாது. "எவன் தன் குலதேவதையைக் கைவிடுகிறானோ அவனைத் தன் தெய்வமும் கைவிடுகிறது. அந்த (புதிய) தேவதையும் அருள்புரியாது. அவன் பாபியாவான்." என தைத்திரீய் ச்ருதி கூறுகிறது. (2, 5, 4, 4.)

வ்ருஷத்வஜன் என்ற அரசன் தன் குலோசிதமான விஷ்ணுவைவிட்டு இதர தேவதைகளையும் விட்டு சிவார்ச்சனையே செய்தான். பரம ஏழையாகும்படி சூர்யன் அவனைச் சபித்தார். அவ்ன் சிவனைவேண்ட, சூலபாணியாக அவர் சூர்யனைச் சிக்ஷிக்கக் கிளம்பினார். சூர்யன் பயந்து தன் தந்தை கச்யபரைச் சரணமடைய அவரும் பயந்து ப்ரும்மாவிடம் செல்ல அங்கும் உக்ரமாக வந்த சிவனைக்கண்டு அஞ்சி விஷ்ணுவினிடம் எல்லோரும் சென்றனர். விஷ்ணு அவரை உபசரித்து, வ்ருஷத்வஜனும் அவன் ஸந்ததிகளும் ஏழையாகவே இறந்தனர். அவர் ஸந்ததியில் பிறந்த ஓரரசனது மனைவி (குலதேவதையை விடாமல் உம்மையுமாராதித்து) லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றாள் என ஸமாதானப்படுத்தினார். (தேவீ பாகவதம். 9வது ஶ்லோகம். 15 அத்யாயம்) குலதேவதையைவிடாமல் இஷ்டமான மூர்த்தியை உபாஸிக்கலாம்.

### விக்ரஹாராதநம் வந்தவழி.

மோக்ஷமே பரமஸுகம். அதே ஒவ்வோர் மானிடப் பிறவிக்கும் லக்ஷ்யம். அதைப்பெற க்ஞானமே ஸாதநம். ஞாநத்தைப் பெற, பாப புண்யங்களைக் கர்மாவினால் அகற்றிக்கொண்டே நிர்க்குண பரமாத்ம ஸ்வரூபத்தை உபாஸிக்கவேண்டும். அது ஸாத்யமில்லாதவர், ஸகுண ப்ரும்மத்தை உபாஸிக்கவேண்டுமென கூறப்பட்டது.

**अग्नौ तिष्ठति विप्राणां हृदि तिष्ठति योगिनां ।**
**प्रतिमास्वप्रबुद्धानां सर्वत्र समदर्शिनाम् ॥**

அக்னௌ திஷ்டதி விப்ராணாம் ஹ்ருதிதிஷ்டதி யோகிநாம்
ப்ரதிமாஸ்வ ப்ரபுத்தானாம் ஸர்வத்ர ஸமதர்ஶிநாம் ॥



விப்ரர்களுக்கு அக்நியிலும் யோகிகளுக்கு ஹ்ருதயத்திலும், வேதாந்த எழிர்ச்சி அநுபவக்ஞாநமில்லாதவருக்கு ப்ரதிமையிலும், தத்வ தர்சிகளுக்கு எங்கும் பகவான் இருக்கிறார் என்ற வசநத்தால், வேதோக்தமான த்ரேதாக்நியில் யக்ஞரூபமாகவோ அல்லது சிதக்நியில் த்யாகரூபமான ஹோமத்தினாலோ அர்ச்சிக்க முடியாதவரும், அல்லது ஹ்ருதய கமலத்தில், யமநியமாதிகளால் மநதை ஒடுக்கி பகவானை அர்ச்சிக்க முடியாதவரும் அல்லது உலகை உலகாகக் காணாமல் ஆங்குள்ள அஸத்யமான நாம ரூபங்களைவிட்டொழித்து, அஸ்தி பாதி ப்ரியம் எனும் ஆத்ம ஸ்வரூபமாக அர்ச்சிக்க முடியாதவரும், ப்ரதிமையில் பகவானை அர்ச்சித்தல் வேண்டுமென ஸ்பஷ்டமாகிறது. இதுபடிக்கத் தெரியாதவருக்கு ஆண் பெண் சித்ரமெழுதி விளக்குவது போலாம்.

கர்மா யோகம் பக்தி இந்த ஸாதநங்களால் முக்யமாக மநம் ஏகாக்ரப்படுதலும் சுத்தமாவதுமே கோரப்படுகிறது. மநம் சுத்தமாக ஆஹார சுத்தி முதலிய பல ஸாதநங்களும் உள. அவைகளால் மநதைச் சுத்தமாக்கிய பின் ஏகாக்ரதை தானே ஸித்திக்கும். ஆலயங்களில் உள்ள ஶிவ விஷ்ணு மூர்த்திகளை தர்சிப்பதாலும் த்யாநம் செய்வதாலும் மநம் ஒருமைப்படும்.

### ஏன் ப்ரும்மாவுக்கு ஆலயமில்லை ?

சிவாலயங்களில் 274 பாடல்பெற்றவை. மற்றும்பல வைப்பு ஸ்தலங்களுமுண்டு. விஷ்ணுவுக்கும் 108 ஆழ்வாராதிகளால் மங்களாஶாஸநம் செய்யப்பட்ட க்ஷேத்ரங்களும் மற்றும் பலவும் காணப்படுகின்றன. **விக்ரஹம் ஈசனருளைக் குவிக்கும் சூர்ய காந்திக் கண்ணாடியாகும்.** எங்குமுள்ள பசுவின் பாலை ஸ்தநத்தின் மூலம் கறப்பது போல் எங்குமுள்ள கடவுளை விக்ரஹ ரூபமாக உபாஸிக்கிறோம். ஆங்கு ஸகுண மூர்த்திகளான சிவ விஷ்ணுக்களைத் தர்சிக்கின்றோம்.

ப்ரும்மாவுக்கு அத்தகைய ஆலயங்கள் விசேஷமாக இல்லாததுடன் உள்ள சிவக்ஷேத்ரங்களிலேனும் விஷ்ணு க்ஷேத்ரங்களிலேனும் (திருக்கண்டியூர், பாண்டிக் கொடிமுடி, சிதம்பரம் இவைகளைத்தவிர) ப்ரும்ம ஸன்னதி

காணப்படாதது ஆச்சரியமல்லவா? உலக ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரும்மாவுக்கு ஆலயமில்லை எனில் அவர் செய்யும் தொழிலான ஸ்ருஷ்டி வேண்டாமென்று பொருளாகுமா? ஆலயம் இல்லாத ப்ரும்மனைப்பற்றி "உன்னைப் படைத்தானே அவன் கோயில் இடிய" என்ற நிந்தா வாக்யமும் கூறப்படுகிறது. ஏன்? சிவன் முடியைக்காண ஹம்ஸரூபமெடுத்து, முடியைக்கண்டதாகப் பொய் கூறியதால் அவருக்கு ஆலயமும் அர்ச்சனையும் கூடாதென ஶிவன் சாபமளித்ததாக ஓர் புராணக்கதை கூறுகிறது.

வாக்கும் மநமும் தானே சிறந்தவன் தானே சிறந்தவனென சண்டையிட்டுக்கொண்டு ப்ரும்மாவிடம் மத்யஸ்தத்திற்குச் சென்றதாகவும். அவர் மநதால் நினைப்பதையே வாக்கு சொல்வதால் மநதிற்கு வாக்கு தூதி என்றதாகவும், சிநங்கொண்ட வாக்கு "இனி ப்ரும்மாவுக்கு வாக்கால் மந்த்ரங்கூறி ஹோமமில்லை" என்று சாபங்கொடுத்ததாகவும் வேதத்தில் ஓர் கதை காணப்படுகிறது. இவைகள் பொய் கூறக்கூடாது, பக்ஷபாதங் கூடாதென்ற நீதியையே போதிக்கவந்தன. ஸத்வகுண ப்ரும்மாவுக்கு பூஜைஇல்லை என்பதும் வாக்கினால் ஹோமமில்லை என்பதும் சாரீரக மாகவும் வாசிகமாகவும் பூஜையில்லை என்பதைக் காட்டுகின்றன. ஆனால் முக்கரணங்களில் மிகுதியான மநதினால் பூஜிக்கலாமென ஏற்படுகின்றது. அதற்கேற்க கர்மமார்க்கத்தில் **प्रजापतिं मनसा ध्यायन्**-ப்ரஜாபதிம் மநஸா த்யாயந்-ப்ரும்மாவை மநதினால் நினைத்துக்கொண்டு" என்றும் வ்யாஹ்ருதிகளைச்சொல்லி ஹோமம் செய்து உத்தேச த்யாகத்தினால் "ப்ரஜாபதய இதம் ந மம" என்று கூறுவதும் கர்ம ஸாக்ஷியாக ப்ரும்மவரணம் என்று ப்ரும்மாவை வரிப்பதும், ப்ரும்மாவை மநதினால்மாத்ரம் உபாஸிக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன.

அப்படி மநதினால் மாத்ரம் அவரை அர்ச்சிப்பது மாநஸிக த்யாநமாகும். வாசிகமான ஜபரூப அர்ச்சனை செய்வோரும் சாரீரகமான பூஜை செய்பவரும் மநதினால் த்யாநம் செய்யவேண்டும் என்பதனால் மாநஸிக த்யாநமே எல்லாவற்றிலும் சிறந்ததென ஏற்படுகின்றது.



**॥ कायिकाद्वाचिकं श्रेष्ठं वाचिकादपि मानसं ॥**

காயிகாத்வாசிகம் ஶ்ரேஷ்டம் வாசிகாதபி மாநஸம்

காயிகத்தை விட வாசிகம் சிறந்தது. வாசிகத்தை விட மாநஸிகம் சிறந்ததென தேவீபாகவதம் கூறுகிறது.

**॥ अन्तर्मुख समाराध्या बहिर्मुखसुदुर्लभा ॥**

அந்தர்முக ஸமாராத்யா பஹிர்முக ஸுதுர்லபா ॥

அந்தர்முகமாக பூஜிக்கத் தக்கவள். பஹிர்முக மானவருக்குக்கிட்டாதவள் என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும்

**समर्प्यैकं चेत**: ஸமர்ப்யைகம் சேத:

என்ற சிவாநந்த லஹரியும் "அவன் ஒருவனையே ஆத்மாவாக அறி. மற்ற வாக்குகளை விடு" என்ற உபநிஷத்தும் மற்றும் பல ப்ரமாணங்களும் மாநஸிக த்யாநத்தையே உயர்ந்ததெனப் போற்றிப் புகழ்கின்றன. ஆதலால் உபாஸநக்ரமத்தில் மாநஸிகமான ப்ரும்ம பூஜையும், ஸகுணமும் நிர்க்குணமுமான சிவலிங்கபூஜை மாநஸிக வாசிகமாகவும், கைகால் முதலிய அவயவங்களுடன் கூடிய, விஷ்ணு பூஜை மாநஸிக வாசிக காயிகமாகவும் தோன்றியதெனலாம். மநதினாலே அர்ச்சிக்கத்தக்க ப்ரும்மாவுக்கு காயிக அர்ச்சைக் கேற்ற ஆலயமில்லாதது உசிதமேயாகும்.

**சிவன் லிங்கவடிவமா யிருப்பதேன் ?**

ஹரியும் அஜனும் அஹங்காரங்கொண்டு நான் பெரியவன் என்று சண்டையிட்ட காலத்திலே பரமசிவன் ஜ்யோதிர் லிங்கவடிவமாக நின்றார் என்றும், தாருகாவன முனிவர்களுக்குப் பக்திமார்க்கத்தைப் புகட்ட அவதூதராய்ச் சென்றபோது முனிவரது சாபத்தால் சிவனது லிங்கமறுந்துவிழ, உலகமதை ஸஹியாமல் தவித்தபோது ஶிவ லிங்கத்தை அர்ச்சிக்கும்படி ப்ரும்மா உபதேசித்ததாகவும் அதே லிங்கமாக அமையக் காரணம் என புராணக்கதை கூறுகிறது.

**शिवएवस्वयंलिंगं लिंगं गमकमेव हिं ।**
**शिवेन गम्यते सर्वं शिवो नान्येन गम्यते ॥**
**जडंहि गम्यतेऽन्येन नाजडं मुनिपुंगवाः ।**
**शिवो नैव जडः साक्षात् स्वप्रकाशैक लक्षणः ॥ (सूतसंहिता)**

ஶிவஏவ ஸ்வயம் லிங்கம் லிங்கம் கமகமேவ ஹி
ஶிவேந கம்யதேஸர்வம் ஶிவோ நாந்யேந கம்யதே ||
ஜடம்ஹி கம்யதேஅந்யேந நாஜடம் முநிபுங்கவா: |
ஶிவோ நைவ ஜட: ஸாக்ஷாத் ஸ்வப்ரகாஶைகலக்ஷண:

(ஸூதஸம்ஹிதை.)

சிவன் தானே லிங்கமாயிருக்கிறார். லிங்கமென்றால் ஒன்றை எண்பிப்பது எனப் பொருள். சிவனால் உலகெலாம் எண்பிக்க சிவன் எவராலும் எண்பிக்கப்படவில்லை. ஜட வஸ்துதான் ப்ரகாச வஸ்துவால் எண்பிக்கப்பட வேண்டும். முநிஶ்ரேஷ்டர்களே! ப்ரகாசப் பொருள் எண்பிக்கப்பட வேண்டுவதில்லை. சிவன் ஜடனல்ல. அவன் ஸாக்ஷாத் ஸ்வயம்ப்ரகாசன் என ஸூதஸம்ஹிதை கூறுகிறது.

எந்த சிவாலயத்திலும் சிவன் லிங்காகாரமாகவே காணப்படுகிறார். உத்ஸவ மூர்த்திகளே கரசரணாதிகளுடன் காணப்படுகின்றன. இரண்டொரு க்ஷேத்ரங்களில் தான் (சிய்யாழி தோணியப்பர்) மூல விக்ரஹங்கள் காணப்படுகின்றன. இதன் உண்மை யாதெனில், பரம சிவனே நாமரூபமற்ற உபநிஷத்துகளால் அகண்ட ஸச்சிதாநந்தன் என வர்ணிக்கப்படும் பரமாத்மா. ஆனால் உபாஸகர்களது நன்மையை நாடி லிங்கம், பேரம் என்று இரண்டு வடிவமாகவும் தோன்றுகிறார். லிங்கம் அரூபமாயும் ஸரூபமாயுமுள்ளது. பேரம் என்பது ஸகுண மூர்த்தியாம்.

ஸஜாதிய விஜாதிய ஸ்வகத பேதமில்லாத ஒன்றான வஸ்து இது என்பதைக் காட்ட அடி நுனி தெரியாது லிங்கம் ஏகாகாரமாக நிற்கின்றது. நாநாகாரமான உலகை எல்லாம் இதனிடம் லயப்படுத்தி (ஸமுத்ரத்தில் நதிகள் மடிந்து நாம ரூப ரஸமற்றுப் போவதுபோல்) லிங்கத்தை அவலம்பமாகக்கொண்டு தன்னையும் மறந்து அத்வைதாகாரமாக பக்தன் த்யாநம் செய்யவேண்டும். என்பதற்காகத் தான் கருணைவடிவரான பரமாத்மா (அருவாய் உருவாய்) லிங்கமாயிருக்கின்றார். கேவல அருவானால் பக்தனுள்ளத்திற்குப் பிடிபடாது. கேவல உருவானால் அகண்ட ரூபம தோன்றாது.



த்யாநம் செய்பவன் கண்களைக் கொட்டாமலிருந்தால் கண்ணீர் பெருகும். வெகுநேரம் அங்ஙனமிருக்க முடியாது. திறக்காமல் கண்களை மூடினாலோ தூக்கம் வரும். அதற்காக

**नासाग्रे न्यस्तदृष्टिः**—நாஸாக்ரே ந்யஸ்தத்ருஷ்டி:

மூக்கின் நுனியில் கண்ணை வைத்து த்யாநம் செய் என்பது போல, லிங்கபூஜையாம். பஹிர் முகத்தை ஒடுக்கி அந்தர்முகமாகச் செல்ல லிங்கார்ச்சநமே சிறந்த வழியாகும்.

ஶிவன் ஸகுணனும் நிர்க்குணனுமாவான்.

शिवस्सदाशिवश्चैव महेशः त्रिविधः स्मृतः
शिवतत्वं महासेन निष्कलं चेति कीर्तितं ॥
सकलं निष्कलंचैव सदाशिवमिति स्मृतं ।
महेशं सकलं विद्यात् त्रिविधं तत्वबोधतः ॥

ஶிவஸ்ஸதாஶிவஶ்சைவ மஹேஶ: த்ரிவித: ஸ்ம்ருத: |
ஶிவதத்வம் மஹாஸேந நிஷ்களம் சேதி கீர்த்திதம் ||
ஸகலம் நிஷ்களம்சைவ ஸதாஶிவ மிதிஸ்ம்ருதம் |
மஹேஶம் ஸகலம் வித்யாத் த்ரிவிதம் தத்வபோதத: ||

வாதுல சுத்தம், தத்வபேதத்தால் பரமஶிவன், ஸதாஶிவன், மஹேசன் என மூன்று பிரிவுகளுண்டு. ஶிவதத்வம் நிஷ்களமானது ஸதாஶிவம் ஸகலமாயும் நிஷ்களமாயுள்ளது. மஹேசன் ஸகலமாகவே உள்ளவர்.

சிவம் நிர்க்குணமான பரமாத்ம வஸ்து. அதில் பேதமில்லை. சிவஸாதாக்யம், அமூர்த்த ஸாதாக்யம், மூர்த்தி ஸாதாக்யம், கர்த்ருஸாதாக்யம், கர்ம ஸாதாக்யம் என ஸதாசிவ தத்வம் ஐந்து வகைப்படும். 1 சந்த்ரஶேகரர். 2 உமாமஹேஶர். 3 வ்ருஷபாரூடர். 4 நடராஜர். 5 விவாஹமூர்த்தி. 6 பிக்ஷாடனர். 7 காமாரி 8 காலாரி. 9 த்ரிபுராரி. 10 ஜலந்தராரி. 11 கஜாரி 12 வீரபத்ரர். 13 சங்கரநாராயணர். 14 அர்த்தநாரீஶர். 15 கிராதர். 16 கங்காளர். 17 சண்டேஶாநு

க்ரஹர். 18 விஷஹரர். 19 சக்ரதாநர். 20 விக்ந ப்ரஸாதர். 21 ஸோமாஸ்கந்தர். 22 ஏகபாதர். 23 ஸுகாஸநர். 24 தக்ஷிணாமூர்த்தி. 25 லிங்கோத் பவமூர்த்தி என மஹேச தத்வம் இருபத்தைந்து. ஆக சிவ தத்வம். முப்பத்தி ஒன்றாகும். இது சிவனே நிர்க் குணன் ஸகுணன் என்பதை விளக்குகிறது. அன்றியும்.

**योगिनांच यतीनांच ज्ञानिनां मन्त्रिणां त्वथ ।**
**ध्यानपूजानिमित्ताय निष्कलं सकलं भवेत् ॥**

யோகிநாம்ச யதீநாம்ச க்ஞாநிநாம் மந்த்ரிணாம் த்வத |
த்யானபூஜா நிமித்தாய நிஷ்களம் ஸகலம் பவேத் |
[வா. சுத்தம்.]

“யோகிகள் ஸன்யாஸிகள் க்ஞானிகள் மந்த்ரக்ஞர் ஆகியவர் பொருட்டு நிர்குணனான பரமன் ஸகுணனாக ஆகிறான்.” என்பதற்கிணங்க, மற்றும் பற்பல உரு வத்தை எடுக்கின்றார். ஸ்ரீ ருத்ரம் பற்பல ரூபங்களை வர்ணிக்கிறது.

சிவதத்வம் நிர்க்குணம் நிஷ்களமென்றாலும் ஸ்வேச் சையினால் அது காமேஶ்வரராகத் தோன்றி காமேஶ்வரியு டன் ஸ்ரீ நகரத்தில் சிந்தாமணி கிருஹத்தில், ஸ்ரீ சக்ர ராஜத்தின்மீது பிரகாசிக்கின்றார். சிவத்தினிடமிருந்து சக்தியும் சக்தியினிடமிருந்து நாதமும் நாதத்தினிடமிருந்து ஸதாசிவமும் ஸதாசிவத்தினிடமிருந்து மஹேசனும் மஹேசனிடமிருந்து ருத்ரனும் ருத்ரனிடமிருந்து விஷ்ணு வும் விஷ்ணுவிடமிருந்து ப்ரும்மாவும் அவரிடமிருந்து உலகும் தோன்றிற்று. ஆதலின் லோக கர்த்தாவும் ரக்ஷகரும் உபஸம்ஹரிப்பவருமான பரமனை ஸகுணமாக வும் நிர்க்குணமாகவும் நித்ய நிரதிசய ஸுகமெனும் மோக்ஷத்தை நாடி உபாஸிக்க வேண்டுமென நிர்ணயிக் கப்பட்டது.

## வைதிக பூஜை

அப்பரமனை மந்த்ரத்தாலும் யந்த்ரத்தாலும் தந்த்ரத் தினாலும் பக்தர்கள் உபாஸிக்கின்றனர். கேவல வைதிக மந்த்ரத்தால் தன் குடும்பம் க்ஷேமமடைய, க்ருஹத்



தில் அர்ச்சிக்கப்பட்டுவந்த முறை வைதிக பூஜையாம். இது ஶ்ருதியைத் தழுவிய ஸ்மிருதியினால் விதிக்கப்பட்ட ஆந்ஹிக கர்மாவில் ஒன்றாகும்.

**स्नानं सन्ध्या जपो होमः देवतानां च पूजनं ।**
**आतिथ्यं वैश्वदेवं च षट्कर्माणि दिने दिने ॥**

ஸ்நாநம் ஸந்த்யா ஜபோஹோம: தேவதாநாம்சபூஜநம் |
ஆதித்யம் வைஶ்வதேவம்ச ஷட்கர்மாணி திநே திநே |

ஸ்நாநம், ஸந்த்யை, ஜபம், ஹோமம், தேவதார்ச்சநம், ஆதித்யம், வைஶ்வதேவம் என்ற ஆறு கர்மா அன்றன்று செய்யத் தக்கதாம். இதில் ஏகலிங்கார்ச்சநம் ஏக ஸாளக்ராமார்ச்சநம் என்ற தீவ்ர ஶைவ வைஷ்ணவர் களைவிட்டு ஶிஷ்டாசாரப்படி தேவார்ச்சனை புரிவோர்,

**॥ आदित्यमंबिकां विष्णुं गणनाथं महेश्वरं ॥**

ஆதித்யமம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மஹேஶ்வரம்.

ஆதித்யன் அம்பிகை விஷ்ணு கணேசர் மஹேசர் என்ற பஞ்சாயதந பூஜை செய்வர். அதிலும் கண்ணால் கண்டு களிக்கும் விக்ரஹங்களையோ படங்களையோ பூஜிப்பது ஶிஷ்ட ஸம்ப்ரதாயமில்லை. சாஸ்த்ரம் கூறிய படி, சிவஸ்தாநத்தில் நர்மதா பாணம். விஷ்ணு ஸ்தாநத் தில் கண்டகீநதி ஸாளக்ராமம். விநாயக ஸ்தானத்தில் சோணாநதி சோணபத்ரம். அம்பிகை ஸ்தாநத்தில் பஞ்ச லோகத்துண்டும் ஆதித்ய ஸ்தாநத்தில் ஸ்படிகத்தையும் கொண்டு தனது இஷ்ட தேவதையை நடுவே வைத்து பரிவாரங்களாக மற்றவர்களை நான்கு புறத்திலும் வைத் துப் பூஜிப்பர்.

சிவனது பெருமையை விளக்கும் ஸ்ரீருத்ரம் எனும் மஹா மந்த்ரமும் சமகமும், ஸ்ரீவிஷ்ணுவின் பெருமையை விளக்கும் புருஷ ஸூக்தமும், ஸ்ரீ தேவியின் பெருமையை விளக்கும் ஸ்ரீ ஸூக்தத்தையும் அபிஷேக காலத்தில் பாராயணம் செய்தல்வேண்டும். பதினாறு உபசாரங் களே க்ருஹ பூஜையில் நடப்பது. முறையே, விஷ்ணு பூஜைக்கு புருஷ ஸூக்தம் 16 ரிக்கும், தேவி பூஜைக்கு 15 ரிக்குள்ள ஸ்ரீ ஸூக்தமும், சிவ பூஜைக்கு ஸ்ரீ ருத்ரம் 15 ரிக்குள்ள முதலநுவாகமும் 15 உபசாரங்களுக்குக்

கூறப்படும். அடுத்துள்ள 8 அநுவாகங்களால் ஸ்ரீ ருத்ரனுக்கு அர்ச்சனை அல்லது ஸ்துதிசெய்து கடைசி 2 அநுவாகங்களால் ப்ரார்த்தனை செய்வதென்பதோர் முறையாகும். இடை 8 அநுவாகங்களால் த்ரிஶதீ. இந்த வைதிக க்ருஹ பூஜையிலும் ஶிவநாமாஷ்டோத்தர சதார்ச்சனை நடைபெறும். இதே வைதிகபூஜை.

## ஆலய அமைப்பு.

ஜந ஸமுதாய க்ஷேமத்திற்காகவும் மாநஸிக வாசிக பூஜை செய்ய முடியாத நம்போன்றவர்களுக்காகவும் பஞ்ச லிங்காத்மகமான ஆலயமமைக்கப்பட்டது. விஶ்வரூபவடிவமான கோபுரம், த்வஜஸ்தம்பம், ஸ்தூபி, மூலலிங்கம், அர்ச்சகர் அல்லது பலிபீடம் ஆகிய ஐந்தும் ஐந்து லிங்கங்களாம். விமாநமல்லது ஸ்தூபி, கோபுரம், த்வஜஸ்தம்பமிவை ஸ்தூலலிங்கம். பலிபீடம் பத்ரலிங்கம். ஶிவன் ஸௌக்ஷ்மலிங்கம். ஐந்து ப்ராகாரங்களும், மூலஸ்தாநமும் தவிர ஐந்து வாசற்படிகளும். ஒவ்வோர் கோபுரத்திலும் ஐந்து முதல் பதினேரு அடுக்குகளும். ஆலயத்தில் அமைக்கப்படவேண்டும். இவைகளைப்பற்றிக் கூறும் 28 ஆகமங்கள் வேதவேதாந்த தத்துவங்களை உள்ளே அமைத்து எளிதில் எளியவர் பரமாத்மாவின் அருளைப் பெறுவதற்காக பரமசிவத்தாலேயே அருளப்பட்டவைகளாம்.

எங்கும் நிறைந்தபரமனைக்கற்கட்டடங்களுக்குள்ளே சிறிய விக்ரஹாதிகளில் அடைத்து இதே கடவுள் எனக் கூறுதல் முறையோ ? என சங்கை தோன்றில், பராபரனை ஸர்வேஶன் உத்தமருக்கேற்றபடி மாநஸிக பூஜை (த்யாநத்தை) இயற்றி அதற்கேற்க ஸத்வகுணமான ப்ரும்மனுக்கு ஆலயமில்லாமல் மநதினுலேயே த்யானிக்கும்படியும், மத்யமரைநாடி வாசிகமான ஜபரூப ஆராதனையைக் கல்பித்து அதற்கேற்க ரஜோகுண மூர்த்தியான அரூபமாயும் ஸரூபமாயுமுள்ள சிவலிங்கத்தையும், மற்றவர்களுக்கேற்றபடி சாரீரகமான பூஜையைக் கல்பித்து மற்ற குணத்தாலுண்டான மூர்த்தியையும் அருள்புரிந்தார். இங்கு முக்குணங்களைப்பற்றிக் கூறியது ப்ரும்ம புராணத்தை அநுஸரித்ததாகும். மாநஸிகவாசிக சாரீரக பூஜைகள் உத்தம மத்யம அதமர்களைப்பற்றி



கூறுவதால் ஶைவரை உயர்த்தி வைஷ்ணவரைத்தாழ்த்திக் கூறியதாக எண்ணலாகாது. உத்தமருக்கு ஏற்றகோவில் எது என்பதை, "வித்வானுக்கு ஆத்மா யஜமாநன் ஶ்ரத்தை பத்நி. மார்புவேதி" என வித்வத் யாகம், அவித்வத் யாகம் என்று ஶ்ருதி இரு பிரிவாகக்கூறியது போல். வித்வத் ஆலயம் அவித்வத் ஆலயம் என சாஸ்த்ரம் இரண்டெனக் கூறுகிறது.

**देहोदेवालयः प्रोक्तः जीवो देवस्सनातनः ।**
**त्यजेदज्ञान निर्माल्यं सोहं भावेन पूजयेत् ॥**

தேஹோதேவாலய: ப்ரோக்த: ஜீவோதேவஸ்ஸநாதன: |
த்யஜேதக்ஞான நிர்மால்யம் ஸோஹம் பாவேந பூஜயேத்

தேஹமே தேவாலயம் ஜீவனே பர்மாத்மா. அக்ஞாந நிர்மால்யத்தைக் களைந்து, ஸோஹம் என பூஜித்தல் வேண்டும் என்றும்.

**आत्मात्वं गिरिजामतिः**–ஆத்மாத்வம் கிரிஜாமதி: என்ற சிவமாநஸிக பூஜா ஶ்லோகத்தினுல் ஸ்ரீ சங்கரா சார்யாளும், "உள்ளம் பெருங் கோயில்" "காயமே கோயிலாக" என்று மற்றவர்களும் இந்த தத்துவத்தையே வெளியிடுகின்றனர். அதிகாரி பேதத்தினுல் இங்ஙனம் கூறப்பட்டது. என்ருலும் இரண்டிலும் உள் நோக்கிப் பார்ப்பவருக்குத் தத்துவமொன்ருகவே காணப்படும். அவித்வான் வித்வாளுக பாஹ்ய பூஜையிலும் ஆந்தர பூஜை முதலில் விதிக்கப்பட்டுள்ளது.

## அண்டமும் பிண்டமும்.

"எது இங்கு காணப்படுகிறதோ அதே பரலோகத்திலும்" என்று ஶ்ருதி கூறியபடி ப்ரபஞ்சவடிவமான அண்டத்தில் எது காணப்படுகிறதோ அதே உடலான பிண்டத்திலும் காணப்படுகிறது. அன்னமய ப்ராணமய மநோமய விக்ஞாநமய ஆநந்தமய கோஶங்களுக்கு மேலே உள்ளது ஆத்ம ஸ்வரூபம். பஞ்சப்ராகாரங்களுக்கு உள்ளே ஐந்து வாயிற்படிக்குள் உள்ளது கோயிலில் மூலஸ்தாநலிங்கம். நமது உடலில் கண் காது மூக்கு நாக்கு தோல் எனும் 5 க்ஞாநேந்திரியங்களும் வாக்கு

கை கால் ஜலமலத்வாரமெனும் ஐந்து கர்மேந்திரியங்களும், த்வாரமாக அமைந்துளது. இதே ஆலயங்களில் கோபுரத்வாரங்களாகும்.

பல தாமரை இதழ்களால் மூடப்பட்ட ஹ்ருதய குஹையே ஜீவன்இருப்பிடம். அதேபோல் பல த்வாரங்களைக் கடந்து கர்ப்ப க்ருஹம் சென்றே மூல ஸ்தானத்தைத் தர்சிக்கமுடியும். ஹ்ருதயம் எப்படி கஹநமோ நுட்பமோ அங்ஙனமே மூல ஸ்தாநம் மிக ஸூக்ஷ்மமும் ஏகாந்தமானதும் அன்ய வஸ்துக்கள் (ப்ரகாசமும் காற்றும்கூட) நுழையாதபடியும் அமைந்துளது. நமது உடலில் ஒவ்வோரவயவத்திலும் தேவதைகள் தங்கியிருப்பதுபோல் ஆலயத்திலும் பரிவார தேவதைகள் தங்கியிருக்கின்றனர். நாத வடிவனான ஜீவனது சப்தம் நமதுள்ளே கேட்கப்படுவதுபோல் அங்கு மணி சப்தம் கேட்கப்படுகிறது.

### பூஜையும் உத்ஸவமும்.

"நவத்வாரே புரே" என்றபடி ஜீவனுக்கு உடல் ஓர் பட்டணம். உடல் வாழ உணவு அவச்யமாகும். பரமாத்மாவினிடமிருந்து நாம் தோன்றினோம். அவர் பிம்பமாகவும் நாம் பிரதி பிம்பமாகவும் ஆவோம். ப்ரதிபிம்பமான (போட்டோபடமான) நாம் நன்றாக சுகமாக வாழ வேண்டுமாயின் பிம்பமான பரமாத்மா நன்றாக இருக்க வேண்டும். பிம்பமான நமது முகத்தில் அழுக்கிருந்தால் நமது படம் அழகாயிராது. ஆதலின் உபநிஷத் கூறும் வண்ணம் பசி தாஹமில்லாத பரமாத்மாவாக எண்ணப்படும் ஆலயத்திலுள்ள பகவானுக்கு நிவேதனம் பூஜை உத்ஸவம் முதலியன நடைபெறவேண்டும். அக்நி வடிவனான சிவனுக்கு அபிஷேகத்தில் அதிக ப்ரியம். காசி விஶ்வேஶர் முதலிய விடங்களில் தாராபாத்ரத்தின் மூலமாக ஸதா அபிஷேகம் நடைபெறுகின்றது. மஹாக்நி சயநமெனும் யாகத்தில் கருடன் வடிவாக அமைத்த இஷ்டகைமீது ஸ்ரீ ருத்ரத்தைக் கூறி பாலபிஷேகம் செய்யும்படி வேதங் கூறுகிறது. அதனால் சிவனது உக்ரகளை ஶாந்தமாகி உலகக்ஷேமமுண்டாகுமென்பது ஸித்தாந்தம். அத்தகைய அபிஷேகம் செய்து விதிப்படி நிவேதநம்



செய்தால் ப்ரதிபிம்பமான நாம் தாபத்ரயமகன்று வயிறார உண்போம். தீபாராதனை காலங்களில் ஏகமுக ஹார்த்தி முதல் பஞ்ச ஹார்த்தி குடை விளக்கு சித்ர தீபம் முதலியன ஜ்யோதிர் வடிவனான பரமாத்மாவின் ஒளியாற்றான். ஜீவனுக்கும் மநதிற்கும் ஐம்பொறிகளுக்கும் ப்ரகாசமுண்டாகிறதென்பதைக் காண்பிக்கின்றன. அன்றியும் தத்புருஷம் அகோரம் வாமதேவம் ஈஶாநம் ஸத்யோஜாதமென்ற ஐந்துமுகங் கொண்டவர் சிவன். அந்த ஸ்வரூபத்தைக் கண்ணால் கண்டு தீபவடிவனான சிவனை நம்முள்ளே த்யாநம்செய்தல்வேண்டும் என இவை எண்பிக்கின்றன.

**अन्धकारवत् अज्ञानं दीपवत् ज्ञानमुच्यते ।**
**त्यक्त्वा च अज्ञानतिमिरं शिवदीपं प्रचिन्तयेत् ॥**

அந்தகாரவத் அக்ஞானம் தீபவத் க்ஞான முச்யதே |
த்யக்த்வா ச அக்ஞான திமிரம் ஶிவதீபம் ப்ரசிந்தயேத்

அக்ஞாநம் இருள் போன்றது. தீபம் போன்றது க்ஞாநம். அக்ஞான இருளை நீக்க சிவதீபத்தை நினைக்க வேண்டும், நித்ய பூஜைகளில் ஏற்படும் குறையையும் தோஷத்தையும் அகற்றி உலக க்ஷேமத்தை அளிப்பதற்காக ப்ரும்மோத்ஸவம் நடைபெறுகிறது. ஓராண்டு அக்நிஹோத்ரம் செய்தவர் வர்ஷபசு என்ற கர்மா செய்வது போல் ஶ்ரௌத மார்க்கத்தைத் தழுவியே இவ்வுத்ஸவம் விதிக்கப்பட்டுளது. சிவ உத்ஸவம் என இதற்குப் பெயரில்லை, ப்ரும்மோத்ஸவம் என்றே பெயர். இதிலிருந்தே ஆகம விதியும்கூட பரப்ரும்ம ஸ்வரூபத்தை உணர்த்துகிறதென்பது ஸ்பஷ்டம். த்வஜாரோஹணம் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியையும் 10 நாள் உத்ஸவம் ஸ்திதியையும் த்வஜ அவரோஹணம் லயத்தையும் காட்டுகின்றது,

**पति स्तंभमिति ख्यातं पशवस्तद्गताः स्मृताः ।**
**रज्जुः पाश इति प्रोक्तं एवं मायावृतः पशुः ॥**

பதி ஸ்தம்பமிதி க்யாதம் பஶவஸ்தத்கதா: ஸ்ம்ருதா:
ரஜ்ஜு: பாஶ இதி ப்ரோக்தம் ஏவம் மாயாவ்ருத: பஶு:

த்வஜஸ்தம்பம் பதி எனும் பரமாத்மா. அதனுள்ளும் புறமுமுள்ளவை பசுக்களெனும் ஜீவர்கள். அதன்மேல்

சுற்றப்படும் கயிறு பாசமெனும் மாயை. பாசத்தால் பசு (வெளியில்) சூழப்பட்டபோது பசுவெனும் ஜீவன் தோன்றுகிருன். மாயை எனும் ப்ருக்ருதி ஈசனிடம் லயமானபோது ஜகத்திற்கு லயம்.

பகவதிச்சையால் மாயை வெளிவந்தால் ஜகத்ஸ்ருஷ்டியாகும். பாலிகா த்ரவ்யங்கள் விதைக்கப்பட்டு வளருதலும் பற்பல விசித்திர வாஹநங்கள் மீது பகவான் வெளிவந்து ப்ரதக்ஷிணம் செய்வதும் எல்லாவித ப்ராணிகளும் ஸ்தாவர ஜங்கமங்களும் நிறைந்த ரதத்தின்மீது பகவான் வருதலும் அந்தரதத்தை நடராஜா கொளுத்துதலும் (ரதத்தினருகில் சிறிது தர்ப்பை கொளுத்தப்படுகிறது). உடனே தீர்த்தவாரி என்ற தீர்த்தமளித்தலும் த்வஜாவரோஹணமும் சேர்ந்து, ஸ்ருஷ்டி ஸ்திதி ஆநந்த ஸ்வரூபனை பரமாத்மாவை உணர்தல், மித்யா ப்ரபஞ்ச மனைத்தும் கர்மாக்களுடன் எரிந்து ஆநந்தாம்ருத ஜலத்தில் முழுகுதல் என்ற ஐதிஹ்யத்தை உத்ஸவம் ஜாடையாக காட்டுகின்றது. தத்துவத்தை மறைவாகக் கூறுவது வேத இயல்பு. ஆதலால் அது மறை எனப்படும்.

ஆலயம் உத்ஸவம் இவைகளைத் தர்சிப்பதும் சிவ ஸேவையும் ஸ்தூலமான காயிகபக்தி ஆனுலும், அதுவும் பக்தரது ச்ரத்தைக் கேற்றபடி பரம்பரையாக மோக்ஷத்தை அளிக்கவல்லதாம்.

### சிவாலய ஸேவை.

ஆலயமென்ருல் இருப்பிடம் என்று பொருள். ஆயினும் முனிவர் இடத்தை ஆஶ்ரமம், துறவி இடத்தை மடம், க்ருஹியினிடத்தை வீடு என்பது போல் பகவான் உள்ள இடம் ஆலயமெனப்படும். நாலாபுறங்களிலிருந்து தேவர்கள் வந்து தங்கி பகவானை உபாஸிப்பதாலும் ஆலயம் என்ற சொல் மிக்க அர்த்தம் பொருந்தியதாம். அங்கு ஸேவைக்குச் செல்வோர் ஸ்நாநம் செய்து சுத்தமான ஆடைஉடுத்தி விபூதி ருத்ராக்ஷதாரிகளாகச் செல்லவேண்டும். காலில் பாதுகையும் உடலில் அங்கியும் தலையில் தலைப்பாகையுமணிந்து போகக்கூடாது. "வேந்தன் குரு



தேவர் கர்ப்பிணி சிசு நோயாளி இவர்களை வெறுங் கையுடன் காணுதே." என்ற சாஸ்திரத்திற் கிணங்க பழம், தேங்காய், கற்பூரத்துடன் அல்லது பண்டைய பெரியோர்களைப்போல் சிறிது எண்ணையும் திரியுமேனும் எடுத்துச்செல்லவேண்டும். அவரவர் ஆஶ்ரமத்திற்கேற்றபடி ஆடை அணிந்து ஆங்குள்ள புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து. அல்லது காலலம்பி ஆசமநம் செய்து நெற்றிக்கு விபூதி அணிந்து கையில் கொண்டுவந்த பூஜாத்ரவ்யங்களைத் தீர்த்தத்திஞல் ப்ரோக்ஷித்து உள்ளே நுழைய வேண்டும்.

### சில நியமங்கள்.

ஸ்தூல லிங்கமான கோபுரத்திற்குள் காலை வைத்தவுடன் சிவகணங்கள் நம்மிடம் வந்து சூழ்ந்து கொள்கின்றனர். ஆதலின் அதுமுதல் திரும்பிவந்து கோபுர வாயிற்படியில் உட்காரும்வரை கண்டிப்பாக சில நியமங்களைக் கைக் கொள்ளவேண்டும். சிவனுக்கு விரைவில் கோபமும் உண்டாகும். ஸந்தோஷமும் உண்டாகும். ஆதலின் அநாசாரங்களை விட்டு ஆசாரத்துடன் சிவாபராதங்களைச் செய்யாமல் தர்சநம் செய்து திரும்பவேண்டும். தற்காலத்தில் சிற்சில அதிகாரிகளைக் காணவேண்டுமாயின் அவ்வதிகாரி மநதிற் கிசைந்த உடுப்புடன் வேஷத்துடன் செல்வது வழக்கம். ஸர்வேஶ்வரனைத் தர்சித்து அவனது அரிய அருளைப் பெற வேண்டுமாயின், தெய்விகச் சட்டமான சில நியமங்களைக் கைக் கொண்டுதான் போக வேண்டும். பாத்மாதி புராணங்களில் முப்பத்திரண்டு வகையான அபசாரங்களைக் கூறி அதை விடவேண்டுமென விதிக்கின்றன.

உடலின் மேல்பாகத்தைப் புருஷர்கள் மூடிச் செல்லுதல், சொக்காயணிதல், நெற்றிக்கு விபூதி இடாமை, சிகை இல்லாமை, தலை மயிரை அவிழ்த்துத் தொங்கவிடுதல், அதை ஆத்துதல், மூக்கைச் சிந்துதல், தும்புதல், கோட்டுவாய் விடுதல், வாயில் எதையேனும் போட்டிருத்தல், பேசுதல், வேகமாகச் சுற்றுதல், தீபம் அணையும்படி மூச்சுக்காற்று விடுதல், மற்ற ஆலயத்தைப்பற்றி இங்கு கூறுதல், கை கால்களை நீட்டிக்கொண்டு உட்காருதல், படுத்தல், உறங்குதல். சிரித்தல், அழுதல், அடித்தல்

சண்டையிடுதல், எச்சில் துப்புதல், மல ஜலங்கழித்தல், விளையாடுதல், விக்ரஹங்களுக்குப் பின்புறத்தைக் காட்டி நிற்பது, வெற்றிலை போடுதல் இவைகளும் இவைபோன்ற மற்ற சிவாபசாரங்களும் செய்தல் மிக பாபமாகும். சிவ அபசாரத்திற்கு ஆளாகுதல் குளிக்கப் போய் சேற்றைப்பூசிவருவதுபோல் சிவனருளைப் பெருததோடு சிவாபசாரத்தையுந் தேடிய தாகும். ஆதலின் பக்தர்களிதை மிக அவச்யம் கவனிக்கவேண்டும்.

### நமஸ்காரம்.

யாகத்தில் யூபஸ்தம்பம் போல் ஆலயத்தில் ஆகம விதிப்படி ஓர் த்வஜஸ்தம்பம் அமைக்கப்பட்டிருக்கும். அது பஞ்ச லிங்கங்களில் இரண்டாவதாகும். அதனருகே பலிபீடம் எனும் பத்ர லிங்கமும் நந்தியும் அமைக்கப்பட்டிருக்கும். அந்த த்வஜஸ்தம்பம் வெய்யில் மழையிலடிபட்டு அசைவற்று எந்த வகையான மாறுதலுமில்லாமல் தூண்போல் நிற்கின்றது. இது முக்குண வடிவமான மாயாகாரியத்திலீடுபடாமல்கூட ஸ்தூபிரூபமாயிருக்கும் பரமாத்ம ஸ்வரூபத்தை விளக்குவதாம். அதனருகே பலி பீடம் என்பது பரிவார தேவதைகளுக்கு பலி (பூஜை) போடும் இடம். அங்கு நாம் தண்டம்போல் விழுந்து நமஸ்கரிக்கவேண்டும். அங்கு **நான்** என்ற அஹங்காரதைப் பலிகொடுத்து தன்னை மறந்து பகவத்யாநம் செய்ய வேண்டும். அதோடு லௌகிக வீடு வாசல் மனைவி மக்கள் நியாபகத்தையும் விடவேண்டும்.

நமஸ்காரமென்பது பணிவு. நான் என்ற எண்ணமுள்ளவன் எவருக்கும் பணியமாட்டான். நாம் உலகில் எவ்வளவு செல்வம் மேதை அதிகாரம் பெற்றிருந்தாலும் ஈசனெதிரில் அவை ஒரு பொருட்டல்ல. அவனருளின்றி நம்மால் ஒன்றையும் செய்ய முடியாது. கரசரணங்களை அசைக்கவும் முடியாதெனநன்கு உணரவேண்டும். அஷ்டாங்கம் பஞ்சாங்கம் என நமஸ்காரம் இருவகைப்படும்.

தலை,- இரண்டு செவிகள் இரண்டு கைகள், இரு புஜங்கள் (அல்லது இரு கால்கள்) முகவாய் கட்டை ஆக இவை பூமியில் நன்கு படும்படி வணங்குதல் எட்டு அவயவ நமஸ்காரம். ஆண் மக்கள் இதையே செய்யவேண்டும். தலை இருகரங்கள் இரு முழங்கால்கள் ஆக இது



பஞ்சாங்க நமஸ்காரம். இதையே ஸ்த்ரீகள் செய்யவேண்டும். ஐந்து லிங்கம் அல்லது சிவமுகம் ஐந்தாதலால் ஐந்து நமஸ்காரங்கள் செய்யவேண்டும். குறைந்தது மூன்ருவது செய்யவேண்டும்.

॥ मूर्धा हस्तौच कर्णौच चिबुकं भुजयुग्मकं ॥

மூர்த்தா ஹஸ்தௌச கர்ணௌச சிபுகம் புஜயுக்மகம்.

நாம் விழுந்து பணியும்போது எவ்வளவு தூளிகள் நம்மீது படிகின்றனவோ அத்தனை வருஷகாலம் நாம் கைலையில் வஸிப்போம் என ஸ்ம்ருதி கூறுகிறது. எழுந்து விநயத்துடன், ஸதா சிவத்யாநம் செய்து சிவ ஸன்னிதியையே நோக்கி நிற்கும் நந்தியிடம் உத்திரவு பெறவேண்டும்.

### நந்தி சரிதம்.

நைமிசாரண்யத்தில் சிலாதர் என்று ஓர் முனிவரிருந்தார். அவர் புத்ர பாக்யம் பெற ஶிவனை நாடி ஆயிரமாண்டு தவம் செய்தார். ஶிவன் ப்ரத்யக்ஷமாகி யாது வரம் வேண்டுமெனக் கேட்க உம்மைப்போல் உருவும் ஜநநமரணமுமில்லாத புத்ரன் வேண்டுமென்ருர்.

முநிவர் பூமியை உழும்போது ஓர் குழந்தை பூமியிலிருந்து தோன்ற ஸந்தோஷமளித்ததால் அதற்கு நந்தி என நாமமிட்டார். விதிப்படி அதற்கு உபநயநம் செய்து வேதங் கற்பிக்க அவர் கோடிமுறை ஸ்ரீ ருத்ர ஜபம் செய்தார். ஶிவன் யாது வரம் வேண்டுமென மற்ருேர் கோடி ருத்ர ஜபம் செய்ய ஆயுளை வேண்டினர். இங்ஙனமே மூன்றுகோடி ஜபத்தில் நான்காவது கோடி ஆரம்பிக்கும் போது ஶிவன் அவருக்கு ஸாரூப்ய முக்தி அளித்து மருத்துக்கனின் கன்யகையான ஸ்வயமாவை மணம் செய்வித்து ஸர்வாதிகாரி கணமாகச் செய்தார். (கூர்ம புராணம்).

नन्दिकेश महाप्राज्ञ शिवध्यान परायण ।
महादेवस्य सेवार्थं अनुज्ञां दातुमर्हसि ॥

நந்திகேஶ மஹாப்ராக்ஞ ஶிவத்யான பராயண |
மஹாதேவஸ்ய ஸேவார்த்தம்அனுக்ஞாம் தாதுமர்ஹஸி||

கேட்டபோது அவர் மநங்குளிர குஹன் அவருக்கு உபதேசித்தார்" என்றும், காமக்ரோத லோப வடிவர்களான தாரக சூரபத்மா ஸிம்ஹவக்த்ரன் ஆகியவர்களைக் கொன்றார் என்றும் ஸ்காந்தபுராணம் கூறுகின்றது. இவரை முழுமுதல் தெய்வமாகக்கொண்ட கௌமாரம் எனும் மதம் ஷண்மதங்களிலொன்றாம். இவன் ஞானவடிவனாதலால் தீபத்தில் (மாவு தீபம்) அர்ச்சிக்கப் படுகிறான். ஞானத்தைத் தீயாகக் கூறுவது சாஸ்த்ர வழக்கம்.

இவர் ஶிவனது கண் தீப்பொறிகளால் தோன்றியவர் ஆறுமுகத்தர் என்பதும், வேதத்தில் இல்லறத்தவரால் பூஜிக்கத்தக்கதென உபதேசிக்கப்பட்ட ஔபாஸனாக்நி கார்ஹபத்யம் ஆஹவநீயம் தக்ஷிணாக்நி ஸப்யம் ஆவஸத்யம் என்ற ஆறு அக்நிகளே எனப் பெரியோர் கூறுவர். அன்றியும் "அக்நியை விட்டவன் வீரனைக் கொன்றவன்" என்ற ஶ்ருதியும். "அக்நே உனக்கு எல்லா வழிகளும் நன்கு தெரியுமானதால் நல்லவழியாக என்னை செல்வத்திற்கழைத்துச்செல். எனது, பாபமான ஶத்ருவுடன் யுத்தம்செய்து அவனைக்கொல் உமக்கு நமஸ்காரம்" என்ற அக்நி உபஸ்தான மந்த்ரமும், அக்நி ஆகாயத்திற்கு தலை பூமியின் கொண்டைக்குப் பதி என்ற வேதமும், குன்றுதோறும் ஆடும் குஹனையே கூறுவதாகும். மற்றும் பல உதாஹரணங்களாலும் காரணங்களாலும் அக்நியே ஷண்முகனாக உபாஸிக்கப்படுகிறதென்பது திண்ணம்.

இவ்விருவர்களையும் தர்சித்தபின்னர் ப்ரதக்ஷிணமாக வந்து அம்பாளையும் தர்சித்துவிட்டு பரமஶிவத்தைத் தர்சிக்கவேண்டும். அன்னையின் அருளால்தான் ஜகத்பிதாவான ஶிவனருளைப் பெறலாம் என்பது ஓர் முறை. ஶிவதர்ஶநத்திற்குப் பின் அம்பிகை தர்ஶனம் என்பது ஓர் முறை. இரண்டும் ஸரியான வழியாதலால் அவரவர் முன்னோர் அல்லது குரு காட்டிய வழியைப் பின்பற்றுதல் உசிதம்.

### அம்பிகை தர்ஶநம்.

அம்பிகை என்ற சொல்லுக்குத் தாய் என்று பொருள். இச்சொல் ஜகந்மாதாவான பார்வதிக்கே உரியது. "ஏ ருத்ர உமக்கு அம்பிகையுடன் இந்த பாகம்" என்று வேதம் இதை ஆமோதிக்கின்றது. இதிலிருந்தே "ஆதி



தம்பதிகள்" என்றும் "ப்ரபஞ்ச மாதா பிதாக்கள்" என்றும் "ஜகத்திற்கு தாய் தந்தைகள்" என்றும் கவிகள் வர்ணிப்பது பார்வதீ பரமேஶ்வரர்களையே என்பது ஸ்பஷ்டம். அந்த ஜகந்மாதாவே முழுமுதல் தெய்வம் எனக் கூறுவது ஶாக்தமதமாம். இந்த தத்துவத்தை வெளியிட தேவீபாகவதம் காளிகாபுராணம் போன்ற புராணங்களும், சில வேதமந்த்ரங்களும், தூர்வாஸர், அகஸ்த்யர், ஹயக்ரீவர், பராசரர், கௌடபாதர், ஆதிசங்கரர், பாஸ்கரராயர் முதலிய பல மஹர்ஷிகள் எழுதிய ஸ்தோத்ரங்களும் சாஸ்த்ரங்களும் பாஷ்யங்களும் ஸ்துதிகளும் விரிவானவை. ஷண்மதங்களில் ஶாக்தமும் ஒன்றாகும்.

காஞ்சீ க்ஷேத்ரம் ஒன்றைத்தவிர மற்ற க்ஷேத்ரங்களில் அம்பிகை இல்லாத இடமே இராது. அவளுடைய உபாஸனையைப்பற்றிக் கூறுவது ஸ்ரீவித்யை எனப்படும். ஸ்ரீவித்யையும் ப்ரும்மவித்யையும் ஒன்றே என்பது பல உபாஸகர்களது ஸித்தாந்தம். பராசக்தியும் பரப்ரும்மம் போல் ஸகுணையாகவும், நிர்க்குணையாகவும் இருக்கின்றாள். கார்யத்தைக் கருதி பற்பல ரூபங்களை எடுக்கும் பராசக்திக்கு காமேஶ்வரீ, ராஜராஜேஶ்வரீ, லலிதா பரமேஶ்வரீ, புவனேஶ்வரீ, த்ரிபுரஸுந்தரீ, மஹிஷாஸுரமர்த்தனீ, சண்டீ, உமா, தாக்ஷாயணீ முதலிய பல நாமங்கள் தோன்றின. ஸ்ரீ சக்ரமெனும் யந்த்ரமே தேவீ பூஜைக்கு மிகச் சிறந்ததாம். பல கோயில்களில் அம்பாளுக்கு ஸ்ரீசக்ரத்தில் வைதிக பூஜையே நடைபெறுகிறது. முக்யமாக ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டையும், ஸ்ரீ காமாக்ஷி தேவி ஆலயமும் அமைத்து ஆதிசங்கரர் நவாவரண பூஜையை வைதிகமாக ஏற்படுத்தினார். சென்னைக்கடுத்த திருவொற்றியூரில் மலையாள நம்பூத்ரிகளே வந்து தாந்த்ரிக பூஜை நடத்துகின்றனர்.

அந்த அம்பிகையையும் பல ஸ்துதிகளால் போற்றிப் புகழ்ந்து பர்வநோபநிஷத் கூறும் வண்ணம் த்யாநம் செய்யவேண்டும்.

### விஷ்ணு ஸன்னதி.

அநேக ஶிவாலயங்களில் விஷ்ணு ஸன்னதி காணப்படுகின்றது. முக்கியமாக திருவோத்தூர், காஞ்சி

கொடிமாடச்செங்கன்னூர், சிதம்பரம், திருவண்ணாமலை, சிக்கல், திருநணா, திருநாவலூர், திருநெல்வேலி, திருப்பழனம், பாண்டிக்கொடிமுடி, திருப்புத்தூர், திருவக்கரை ஆகிய இடங்களில் ஸாக்ஷாத் விஷ்ணு ஸன்னதி உண்டு. மற்ற ஶிவாலயங்களிலும் வேணுகோபாலன், ஸ்ரீ ராமன், கஜலக்ஷ்மி முதலிய ஸன்னதிகள் காணப்படுகின்றன, 108 திவ்யதேசமென ஸ்ரீவைஷ்ணவர்களால் கொண்டாடப்படுவதில் காஞ்சி ஏகாம்பரேஶர் ஸன்னதியில் ஒன்றும் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஸன்னதியில் மற்றொன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கதாம். இங்ஙனம் கரம்பனூர் (ஸ்ரீரங்கம் ஸமீபம்) எனும் விஷ்ணு க்ஷேத்ரத்தில் பிக்ஷாடனர் என்ற ஶிவலிங்கமிருப்பதும் குறிப்பிடத்தக்கதாம். விஷ்ணு ஸன்னதியுள்ள விடத்தில் அவரை வணங்கித் துதித்துப் பின்னர், ஶிவஸன்னதிக்குச் செல்லவேண்டும். விஷ்ணுவின் பெருமையைக் கூறாத புராணமே இல்லை எனலாம். அவரை முழுமுதற்கடவுளாகக்கொண்ட மதம் ஸ்ரீவைஷ்ணவம். இதுவும் ஆறில் ஒன்று.

ஶிவாலயம் செல்வோர் காணபதம், கௌமாரம், ஶாக்தம், வைணவம், ஶைவம் என்ற ஐந்தும் சிலவிடங்களில் தனியாகவோ அல்லது நவக்ரஹங்களிலொன்றாகவோ ஸௌர்ய ஸன்னதி இருப்பதால் ஸௌரமதமும் ஆக ஷண்மத தேவதைகளையும் தர்ஶிக்கலாம். எம்மதமும் (ஶ்ருதி ஶாஸ்த்ரவிரோதமில்லாதவரை) ஸம்மதம் எனும் அத்வைத மதக்கொள்கைக்கிசைந்தது சிவாலயம் எனப் பல காரணங்களால் நிச்சயமாகின்றது.

### ஶிவதர்ஶன மஹிமை.

கடைசியில் கூறப்பட்டாலும் பரிவாரங்களைத் தாண்டி ப்ரதான அரசனைக் காண்பதுபோல் ஶிவதர்ஶனமே மிக மிக முக்யமாகும், ஶிவதர்ஶனம் செய்யாமல் உண்ணவும் உறங்கவும் கூடாதென புராணாகம விதியாகும். மேல் வஸ்த்ரத்தைப் பூணல்போலணிந்தே தேவ குரு தர்ஶனம் செய்யவேண்டும் என சில தர்மநூல் கூறினும், விநய அதிஶயத்தைக் காட்ட மேல் வஸ்த்ரத்தை இடுப்பில் கட்டிக்கொள்வதே முறை. ஶிஷ்ட ஸம்ப்ரதாயமுமாகும்.



கர்மகாண்டத்திலும் உபநிஷத்துகளில் சிவ உபாஸனை பலவிடங்களில் வர்ணிக்கப்படுகிறது. அருணம் 53வது அநுவாக மந்த்ரத்திற்கு ஸாயணாசார்ய பாஷ்யம்–ஓ பார்வதீ பதியே முக்கண்ணனும் ஸத்வாஸனையுள்ளவனும் லௌகிக வைதிக புஷ்டியைத் தருபவனுமான உம்மை உபாஸிக்கின்றேன். அதனால் பழுத்த வெள்ளிரிக்காய் தன் கொடிக்காம்பிலிருந்து அநாயாஸமாக விடுபடுவது போல் யமனிடமிருந்து யான் விடுபடவேண்டும். மோக்ஷத்திலிருந்து யான் பிரியாமலிருக்கவேண்டும். அருணம் 49வது: உனது பரிவாரமே மற்ற தேவதைகள். நீ எனக்கு மோக்ஷமளி. 10–38 இவைகளில் ஹ்ருதயகமலத்தில் அங்குஷ்டமாத்ரனாயிருக்கும் ஈசன் அருளால்தான் சோக மோஹமகலும் என்றும், 43ல் முதல் 5 மந்த்ரங்களால் மோக்ஷமளிக்கும்படி ஸத்யோஜாத, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஈஶானாதி முகங்களுக்கு நமஸ்காரம் என்றும் 16, 17, 18களில் அவனே எல்லாம், ஸகுணமாயுமுள்ளவனுக்கு நமஸ்காரமென்றும் கூறுகிறது.

“மங்களகரனான ஶிவன் ஒருவனே த்யாநம் செய்யத்தக்கவன்,” என அதர்வஶிகோபநிஷத். “ஹரிப்ரம்மாதி தேவர்களைவிட உயர்ந்தவன் ஶிவன் என உபாஸிப்பவன் கோர ஸம்ஸாரத்திலிருந்து கரை ஏறுவான்.” (ஸூதஸம்ஹிதை.) எவன் யோகமோக்ஷ ஈஶ்வரக்ஞானாதிகளை விரும்புகிறானோ அவன் மஹேஶ்வரனை அர்ச்சிக்க வேண்டும்–(கூர்மபுராணம்.) “எது பரமாத்ம வஸ்து என விவாதத்தைத் தீர்த்துக்கொள்ள முநிவர் ப்ரும்மாவைக் கேட்க, அவர் இந்த பரமஶிவனே பரமாத்மா. அவன் ப்ரஸாதத்தை அடையுங்கள்” என்றார்.—ஶிவபுராணம். மஹாபாரத ஆநுசாஸனபர்வா. 247 அத்யாயம் பூர்ணமாக ஶிவபூஜா வைபவத்தையே வர்ணிக்கின்றது, ஶிவபூஜை இல்லாதவனுக்கு எந்த நன்மையுங் கிட்டாது. (ஹரிவம்ச)

எளிதில் ஆராதிக்கத்தக்க ஶிவனைவிட்டு மற்றவரை உபாஸிப்பவர், கையிலுள்ள பாயஸத்தை விட்டு முழங்கையை நக்குபவராவர்–ப்ருஹந்நாரதம். ஹாலாஹலத்திலிருந்தும் த்ரிபுரரிடமிருந்து உலகைக்காத்த கருணாமூர்த்தியான ஶிவனே உபாஸிக்கத்தக்கவன்.—ப்ரும்ம புராணம்.

ஆனந்தரூபியான அரனைச்சுமக்க எவருக்கும் சக்தியில்லை.' ஆதலால் யான் (விஷ்ணு) வாஹனமாகி அவரைச் சுமந்தேன். அவரைத் தர்ஶிப்பவர் பாபமகன்று நித்யாநந்தம் பெறுவர்.—ப்ரும்ம வைவர்த்தம்.

88 ஆயிரம் வாலகில்ய ரிஷிகள் ஆயிரமாண்டு ஶிவனை நாடித் தவம்புரிய அன்னையின் அருளால் ஶிவன் அவர்களுக்குச் சிவலிங்கந் தந்தருளினர்-வாமனபுராணம்

நாபாகனுக்குச் செல்வத்தைத் தந்து காக்ஷியளித்த கைலாஸநாதனை அர்ச்சித்து இஹபரசுகம் பெறலாம்—மார்க்கண்டேய புராணம். கொடிய பாபஞ்செய்யும் வேடனுக்கும் திருடனுக்கும் பாபத்தையகற்றி ஸத்கதி அளிக்க ஶிவனையன்றி வேறு யாரால் முடியும்?—பாத்ம புராணம். சிவலிங்கமில்லாவூர் சுடுகாடு.—ஶிவரஹஸ்யம். இன்னும் எண்ணிறந்த ப்ரமாணங்கள் உள.

ஶிவலிங்கத்தை எப்படி ஸேவிப்பது?

அடிமுடியற்ற லிங்கம் ஶிவனே பரமாத்மா எனக் காட்டுகிறது. ஏன்றாலும் பக்தர்களது உபாஸனைக்காக உருவெடுத்தவர் ஆதலால் நான்கு திக்குகளிலும் நான்கு (ஸத்யோஜாதாதி) முகங்களை த்யாநம் செய்து ஊர்த்வ முகமாயுள்ள ஈசாநமுகத்தை நமக்கு எதிர்முகமாயிருப்பதாக த்யாநம் செய்யவேண்டும். யாதொரு காமனையுமில்லாமல் உபாஸிப்பதே சிறந்த பக்தியாகும். என்றாலும்,

अनायासेन मरणं विना दैन्येन जीवनं ।
देहि मे कृपया शंभो त्वयि भक्तिमचंचलां ॥

அநாயாஸேந மரணம் விநாதைந்யேந ஜீவநம் |
தேஹிமே க்ருபயா ஶம்போ த்வயி பக்திமசஞ்சலாம் ||

ஶம்போ ஆயாஸமின்றி மரணத்தையும் எழ்மையின்றி பிழைப்பையும் உன்னிடம் அசஞ்சலமான பக்தியையும் கொடு என்று வேண்டுவது சிஷ்டாசாரமாகும். இதில் எல்லாமடங்கியுள்ளது. ஶிவஸன்னதியில் ஸ்ரீ ருத்ரம் அல்லது அவன் பெருமையை விளக்கும் வேதமந்த்ரங்கள் மற்ற ஸ்துதிகளைக் கூறவேண்டும். சிறிது நேரம்



தர்சித்தாலும் மனம், வாக்கு காயம் என முக்கரணங்களும் ஒன்றுபடவேண்டும். த்யாநபலத்தால் பஞ்சமுகத்துடன் ஈசனை அங்கு ப்ரத்யக்ஷமாக தர்ஶிக்கவேண்டும். "ஏகாந்தே ஸாத்விகிபக்தி" என்று **கணேசகீதை** கூறுவதுபோல் கூட்டமிருந்தாலும் ஒன்றையும் கவனியாமல் மநமுருகக் கண்ணீர் பெருக மயிர்க்கூச்சல் தோன்ற (லௌஹிகத்தில் நமது அதிகாரிகளிடம் எப்படி கைகட்டி வாய்புதைத்து அடக்கத்துடன் நிற்போமோ அதைவிட ஆயிரம் மடங்கு) அச்சத்துடன் ஸேவிக்கவேண்டும். அர்ச்சனை அர்ச்சகர் மூலம் செய்யவேண்டும்.

ப்ரதக்ஷிணம்.

இதற்கு வலமாக வருதல் என்று பொருள். "காலை ப்ரதக்ஷிணம் நோயை யகற்றும். பகல் ப்ரதக்ஷிணம் விருப்பத்தை அளிக்கும். மாலை ப்ரதக்ஷிணம் எல்லா பாபத்தையு மகற்றும். அர்த்தயாம ப்ரதக்ஷிணம் முக்தியையளிக்கும்." (ஸகலாகம ஸாரஸங்கரஹம்) விநாயகருக்கு ஓர் ப்ரதக்ஷிணம், சூர்யனுக்கு 2, ஶிவனுக்கு 3, தேவிக்கும் விஷ்ணுவுக்கும் 4, அச்வத்தத்திற்கு 7.

एकं विनायके प्रोक्तं द्वे सूर्ये त्रीणि शंकरे ।
चत्वारि देव्या विष्णोश्च सप्ताश्रवत्थे प्रदक्षिणं ॥

ஏகம் விநாயகே ப்ரோக்தம் த்வேஸூர்யே த்ரீணிஶங்கரே
சத்வாரிதேவ்யா விஷ்ணோஶ்ச ஸப்தாஶ்ரவத்தேப்ரதக்ஷிணம்

இவை குறைந்தபக்ஷ கணக்கையே கூறுகின்றன. பயனை விரும்புவோர் 21, 108 செய்யலாம். கைகளை ஆட்டாமல் (அஞ்ஜலி செய்து) வாக்கால் ஸ்துதிசெய்துகொண்டு ஹ்ருதயத்தில் பகவத்யாநம் செய்துக்கொண்டு ஆஸன்ன ப்ரஸவையான ஸ்த்ரீ எண்ணைக் குடத்தை எடுத்துச் செல்வதுபோல் அடிமேல் அடிவைத்து ப்ரதக்ஷிணம் செய்தல் வேண்டும்.

ப்ரணவமே ஈஶ்வரனது உடல். அதே மந்த்ரங்களில் சிறந்தது. அதிலிருந்தே வேதந் தோன்றிற்று. ஆதலால் ப்ரணவ வடிவனான கடவுளை ப்ரணவாகாரமாக வலம் வருதல் உடலாலும் ப்ரணவ ஜபம் செய்வதாகும்.

॥ क्रियया जपरूपं हि प्रणवं तु प्रदक्षिणं ॥

க்ரிய்யா ஜபரூபம் ஹி ப்ரணவம் து ப்ரதக்ஷிணம்.

அன்றியும் பலிபீடம் சிவனது மாயா சக்ரமாம். நாம் ஜநந மரண மெனும் மாயா சக்ரத்தில் சுழன்று வருகிறோம். மாயா சக்ரமான பலிபீடத்துடன் மும்முறை ப்ரதக்ஷிணம்செய்வது ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களிலிருந்து என்னை விடுவி எனக்கோருவதாகும்.-சிவபுராணம்.

ஜன்மாந்தரத்தில் செய்த பாபங்களெல்லாம் ப்ரதக்ஷிணத்தாலகலுவதாக ஸகல புராணங்களும் கூறுகின்றன.

ஓர் பக்ஷி தற்செயலாக காசி அன்னபூர்ண ஆலயத்தை ப்ரதக்ஷிணம் வந்ததால் இரண்டு கல்பம் ஸ்வர்க்க ஸுகத்தை அனுபவித்து பூமியில் அரசனாகப் பிறந்தது—தேவீ பாகவதம்.

ஒரு ப்ரதக்ஷிணத்தால் பாபமகலும், இரண்டாவதால் ஸகல ஸித்திகளுமுண்டாகும். மூன்றாவதால் சிவன் கடனாளியாகிறார்.—கூர்ம புராணம்.

ஒரே ஆலயத்திலுள்ள, கணநாதர், குஹன், அம்பிகை முதலிய ஸன்னதியைத் தனித்தனியாக ப்ரதக்ஷிணம் செய்யக் கூடாது. சேர்த்தே பொதுவாக ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். த்வஜஸ்தம்பத்திற்கு வெளியிலுள்ள விடங்களுக்கு இந்த நியமமில்லை.

## மற்றோர் ப்ரதக்ஷிணம்.

ஸோம ஸூத்ர ப்ரதக்ஷிணம் என்றோர் முறை உண்டு. அதை நித்யமே செய்யலா மெனினும் ப்ரதோஷ காலத்தில் விசேஷமாக அதை அநுஷ்டிப்பது சிஷ்டாசாரமாம்.

वृषंचण्डं वृषंचैव सोमसूत्रं पुनर्वृषं ।
चण्डंच सोमसूत्रं च पुनश्चण्डं पुनर्वृषं ॥

வ்ருஷம்சண்டம் வ்ருஷம்சைவ ஸோமஸூத்ரம் புனர்வ்ருஷம் |
சண்டஞ்ச ஸோமஸூத்ரம்ச புநஸ்சண்டம் புனர்வ்ருஷம்

முதலில் நந்தியைத் தர்சித்து இடது புறமாகவே சென்று சண்டிகேசரைத் தர்சித்து அங்கிருந்து வந்த வழியாகவே திரும்பிவந்து நந்தியைத் தர்சிக்கவேண்டும்.



அங்கிருந்து வலமாகச் சென்று ஸோமஸூத்ரம் அல்லது கோமுகி எனும் சிவலிங்காபிஷேக திர்த்தம் விழும் இடத்தைத் தர்சித்து வந்த வழியாகவே திரும்பி நந்தியைத் தர்சிக்கவேண்டும். மறுபடியும் அங்கிருந்து இடது பக்கமாகப் போய் சண்டிகேசரைத் தர்சித்து அதே வழியாகத் திரும்பிவந்து வலது புறமாகச் சென்று ஸோமஸூத்ரத்தைத் தர்சித்து அதே வழியாகத் திரும்பி வந்து இடது புறமாகப் போய் மறுபடி சண்டிகேசரைத் தர்சித்து அதே வழியாகத் திரும்பிவந்து நந்தியின் வ்ருஷணத்தைக் கையால் தொட்டு இரு கொம்புகள் வழியாக சிவலிங்கத்தை க்ஷணநேரம் "ஹர ஹர" என தர்சநம் செய்து திரும்பவேண்டும்.

உடலெலாம் படும்படி படுத்துக்கொண்டே ப்ரதக்ஷிணம் செய்வது அங்க ப்ரதக்ஷிணம். ஓரடிக்கோர் நமஸ்காரம் செய்து வலம்வருவது அடித்தண்ட ப்ரதக்ஷிணம்.

## நடராஜ தர்சநம்.

நடராஜமூர்த்தி இல்லாத ஆலயமே இல்லை எனலாம். ஆநந்தமுள்ளவரிடமே ஆடலும் பாடலும் தோன்றும். பரமாத்மா நித்யாநந்த ஸ்வரூபி. அந்த ஸ்வரூபத்தை உணர்ந்த ஜீவன். முக்தன். "இஷ்டமான அன்னத்தை உண்டு இஷ்டமான உருவைக்கொண்டு ஸாமகாநம் செய்வான்"—என தைத்திரீயோபநிஷத்து கூறுகிறது. அங்ஙனம் நித்யாநந்தத்தால் கூத்தாடுபவரில் ராஜா அல்லது நடநத்தால் ப்ரகாசிப்பவர் என்பது நடராஜா என்னும் சொற் பொருளாம். சிதம்பர நடராஜமூர்த்தியைத் தர்சித்தாலே பேராநந்த முண்டாகும். ஸூக்ஷ்மத்ருஷ்டியுடன் நோக்கினால் சித்சைதன்ய வடிவான அம்பரம் ஆகாசம். அதாவது தஹரவித்யையில் கூறப்படும் ஹ்ருதயாகாசம். அதே அதி ரஹஸ்யமானது. பகவான் ஆடும் போது உலகெலாம் பரவசமாகி அதில் ஈடுபடுகின்றது.

அபஸ்மாரமெனும் அக்ஞாநத்தைக் காலால் மிதித்து மழுவெனும் ஞாநத்தைக் கரத்திலேந்தி உடுக்கையெனும் ஓங்காரத்தையும் மிருகமெனும் வேதத்தையும் கையிலேந்தி சித்சபையில் ஆடினால் அது எவர் மநதைத்தான் கொள்ளைகொள்ளாது? பதஞ்ஜலி வியாக்ரபாதர் இந்த நடநம் தர்சியாமல் உண்பதில்லையாம்.

திருவாலங்காட்டில் ரத்நஸபை ஊர்த்வதாண்டவம் 1, சிதம்பரம் கநகஸபை ஆநந்த தாண்டவம் 2, மதுரை ரஜதஸபை, கால்மாறி ஆடியது 3, திருநெல்வேலி தாம்ரஸபை 4, திருக்குற்ருலம் சித்ரஸபை 5 என ஐந்து ஸ்தலங்களும் நடராஜருக்கு மிக ப்ரஸித்தமானவை. திருக்களர் (திருத்துரைப்பூண்டி ஸமீபம்), திருநல்லம் (கோநேரிராஜபுரம்), பேரூர் (கோயம்பத்தூரருகு), திருவெண்காடு ஆகிய ஸ்தலங்களிலும் நடராஜமூர்த்தியும் தாண்டவமும் பூஜையும் விசேஷமாகும்.

ஒரு காலைத் தூக்கி நடராஜமூர்த்தி எதிரில் தாளத்துடன் ஆடி தர்சிப்பது ஸாதுக்கள், ஆசாரம்.

### தக்ஷிணமூர்த்தி.

ப்ரதக்ஷிண வழியில் தெற்குமுகமாகக் கால்மடித்து காலைப் போட்டு அமர்ந்து கையினல் சிந்முத்ரையைக் காட்டிக் கொண்டிருக்கும் தக்ஷிணமூர்த்தி எல்லா ஆலயங்களிலுமிருக்கும். ஸநகாதி சிஷ்யர்களுக்கு ஜீவ ப்ரும்ம ஐக்யத்தைக் கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் ஒன்றுசேர்த்து உபதேசிக்கின்ருர், மௌநமாயிருந்து சிறுவரான அவர் உபதேசிக்க கிழவர்களான ஸநகாதிகள் ஆநந்த மடைந்தனர். தக்ஷிணமூர்த்தியைக் குறித்துக் கூறிய அஷ்டகம் வேதாந்த தத்வம் நிறைந்தது. அதைக் கூறி நமஸ்காரம் செய்து வேதாந்த சாந்தி பாடம் படிப்பது ஸதாசாரம். இந்த மூர்த்தியினருகி லமர்ந்து பஞ்சாக்ஷரீ ஜபிப்பதுண்டு. திருநெய்த்தளம் (திருவையாறருகு நின்ற மூர்த்தி) மாயூரம் வெள்ளலார்கோயில், கோவிந்தவாடி அகரம் தக்ஷிணமூர்த்தி விசேஷ ஸ்தலங்கள்.

### சண்டிகேச தர்சநம்.

பக்தவத்ஸல மென்ற 17 வது நாமாவில் இவர் சரித்தைக் காணலாம். நந்திக்கு வரும் பக்தர்களை உள்ளே விடவேண்டிய வேலைபோல இவருக்குப் பக்தர்களது ஸேவைக்கும் பக்திக்கும் ஏற்றபடி சில ஸேவாபலம் அளிக்கும் வேலை சிவனல் அளிக்கப்பட்டிருக்கிறது. உத்யோக காலம் போக மிகுதி காலத்திலெல்லாம் இவர் சிவனையே த்யாநம் செய்வார். இவரது த்யாநம் கலையாவண்ணம் இருகரங்களாலும் சிறிது சப்தம் செய்து



**नीलकण्ठ पदांभोज परिस्फुरित मानस ।**
**शंभोः सेवा फलं देहि चण्डिकेश नमोस्तुते ॥**

நீலகண்ட பதாம்போஜ பரிஸ்புரித மானஸ,
ஶம்போ: ஸேவா பலம் தேஹி சண்டிகேச நமோஸ்துதே.

நீலகண்டன் பாதாரவிந்தத்தில் மநமுள்ள சண்டிகேச உமக்கு நமஸ்காரம். சிவஸேவாபலத்தை அளியும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு கடைசியாக பைரவரை ஸேவித்து வரவேண்டும்.

### பைரவர் தர்சநம்.

சிவகணங்களில் பைரவர் க்ஷேத்ரபாலகராவர். கால பைரவர் கல்பாந்த பைரவர் க்ரோதந பைரவர் கபால பைரவர் ஸம்ஹார பைரவர் உந்மத்த பைரவர் கண்ட பைரவர் உக்ரபைரவர் என எட்டு பைரவர்களுண்டு. காசி க்ஷேத்ரபாலகர் காலபைரவர். பைரவரது பூஜா கல்பம் ப்ரத்யேகமானது. அந்த பதமும் விரிவானது. அவரை வடுகர் என்ற பெயராலுமழைக்கின்றனர். வடுகூர் பைரவரால் பூஜிக்கப்பட்ட ஸ்தலம். 8 பைரவருள் சீர்காழியில் சுக்ரவாரம் அர்த்தஜாம பூஜைக்குப் பிறகு தனியாக பைரவர் பூஜை விசேஷமாக நடைபெறுகிறது. அவ்வூர் வடுகர் ஆலயமாம். அஷ்டபைரவர் அங்குண்டு.

காசியில் தனி ஆலயத்தில் பூஜை நடப்பதுடன் யாத்ரிகர் நித்ய தர்சநத்தில் பைரவரைத் தர்சிக்கும்படி விதி கூறுகிறது. சென்னைக் கடுத்த திருவான்மியூரில் ஏழு பைரவர்கள் ஸன்னதியுண்டு. பக்தர் சென்றபின் கதவைப் பூட்டி சாவியுடன் இவரே காப்பதால் அவரைக் கடைசியாக தர்சிக்க வேண்டும்.

### நவக்ரஹாதிகள்.

பல க்ஷேத்ரங்களில் நவக்ரஹங்கள் ஒன்பதும் சில விடங்களில் அங்கு பகவானை அர்ச்சித்து நன்மையடைந்த நவக்ரஹங்களில் ஒருவரிருவர் அல்லது பக்தர்களது ஸன்னதியும் இதர க்ஷேத்ர மூர்த்திகளும் பக்தர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கங்களும் தர்சிக்கவேண்டியவைகள்.

த்வஜஸ்தம்பத்தி னருகே அல்லது தக்ஷிணாமூர்த்தி எதிரில் பஞ்சாக்ஷரீ ஜபம் செய்யவேண்டும்.

**மூலஸ்தானத்தை ஒட்டியுள்ள தேவர்கள்.**

ஶிவாலயத்தின் மூலஸ்தான மண்டபத்தின் கிழக்கு திக்கில் ஒருபுறம் விநாயகரும் ஒருபுறம் முருகனும் த்வாரபாலகர் போல் வீற்றிருப்பர். அதன் தென்புற மதில் சுவரில் தெற்குமுகமாக ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வடிவம் அமைந்திருக்கும். மேற்குப்புறம் சுவற்றில் மூலஸ்தானத்திற்கு நேர் பின்புறத்தில் லிங்கோத்பவ மூர்த்தி மேற்கு முகமாக அமைந்திருக்கும். அது ஶிவலிங்கம் போலிருக்கும்போது இடையே சிறிது ரூபத்துடன் சிவஸ்வரூபம் வெளிக்கிளம்பிய இடம்போல் இருக்கும். அதன் அடியைத்தேடிச் சென்ற விஷ்ணு வராஹ ரூபியாக அங்கு காணப்படுவார். முடியைத்தேடிச் சென்ற ப்ரும்மா ஹம்ஸவடிவராக மேலே காணப்படுவார். இதே லிங்கோத்பவர். அங்கிருந்து வலமாகச்செல்லும்போது ஸோமஸூத்ரமெனும் அபிஷேக தீர்த்தம் விழும் இடத்திற்கு மேலே வடக்கு முகமாக மதில் சுவற்றில் துர்க்கா தேவியின் உருவம் இருக்கும். மஹிஷாஸுரனைக் கொன்று அவன் தலைமீது நிற்பாள் தேவி. சிலவிடங்களில் இதில் சில மாறுதல் இருக்கலாம்,

**சந்த்ர சேகரமூர்த்தி**— நின்றவடிவமாக தேவியுடன் பஞ்சலோஹமயமானது உத்ஸவமூர்த்தி. ப்ரும்மோத்ஸவ காலத்தில் வீதிவலம் வரும் மூர்த்தி இது. பஞ்சபர்வ காலத்தில் புறப்படுவது இவரேயாம்.

**ஸோமாஸ்கந்தர்.** — உமையுடனும் ஸ்கந்தனுடனும் உட்கார்ந்த கோலத்திலிருப்பது பஞ்சலோஹ மயமானது இது. இரண்டொரு ஆலயங்களில் தான் ஸோமாஸ்கந்த மூர்த்தி சிலைவடிவமாகவுமிருக்கின்றது. வ்ருஷப வாஹநம் ரதம் முதலிய உத்ஸவங்களிலும் இரவுகளிலும் இந்த மூர்த்தியே உத்ஸவத்தில் வெளிவரும்.

**கஜலக்ஷ்மி அல்லது மஹாலக்ஷ்மி**—தநத்திற்கு அதி தேவதையான லக்ஷ்மி சில சிவாலயங்களிலிருக்கும். இருபுறமும் இருயானைகள் கலஶ ஜலத்தால் அபிஷேகம்



செய்வதுபோலிருப்பது கஜலக்ஷ்மி. கஜமில்லாமலிருப்பது மஹாலக்ஷ்மி. பக்தருக்குப் பொருள் வடிவமான அருளைத்தருபவள் அவள்.

**ஸரஸ்வதி**— கல்விக்கு அதிஷ்டான தேவதையான ஸரஸ்வதி வீணா புஸ்தகதாரிணியாக அமர்ந்து கல்வி அறிவை அளிக்க ஆலயத்தில் இருப்பாள்.

**சாஸ்தா**— ஹரிக்கும் ஹரனுக்கும் புத்ரனாகப் பிறந்தவர். பூர்ணா புஷ்கலா என்ற இருமனைவிகளுடன் இருப்பார். தர்ம ஶாஸ்தா யோக ஶாஸ்தா ஹரிஹரபுத்ரன் என பல பெயர்களுண்டு. மலையாளத்தில் ஒவ்வொரு கோயிலிலும் அவரைக்காணலாம். தக்ஷிண தேசத்திலோ மிக அபூர்வமாகவே இரண்டொரு ஆலயங்களிலிருக்கும்.

**பள்ளி அறை**— படுக்கும் உள்போல் அலங்காரத்துடன் உள் ப்ராகாரத்தில் இருக்கும் இடமிது. இரவில் அர்த்தயாம பூஜை முடிந்தபின் சிறிய பல்லக்கில் சிவ விக்ரஹம் அல்லது பாதுகை வாத்தியத்துடன் இங்கு கொண்டுவைக்கப்படும். அதிகாலையில் முதலில் இங்கு பால் நிவேதனம் செய்து அந்த விக்ரகத்தை அழைத்து வந்தபின்பே காலை ஸந்தி முதலிய பூஜை ஆரம்பிக்கப்படும்.

**ப்ரதோஷமூர்த்தி** — ஒவ்வொரு ப்ரதோஷத்திலும் புறப்படும் சிறிய உத்ஸவமூர்த்தி. சிறிய வ்ருஷபவாஹநத்தின்மீது கிளம்பி வருவார்.

**ஆலயத்தில் செய்யத் தகாதவை.**

**த்வஜஸ்தம்பத்தைத் தாண்டி உள்ளே சென்றபின் நமஸ்காரம் கூடாது.** முன்னும் பின்னும் நமது உடலிலும் சிவபக்தகணங்களிருப்பதால், நமது கால் பக்தர்களுக்கெதிரே நீட்டப்பட்டால் சிவாபசாரம் வரும். நந்தி சிவனிருவர்களுக் கிடையே சென்றால் ஏற்கனவே நாம் செய்திருந்த புண்யங்கள் அகன்று விடும். இத்தகைய பாபம் நேராதபடி ஒவ்வோர் ப்ராகாரத்திலும் ஓர் நந்தி சிலவிடங்களில் வைக்கப்பட்டிருக்கும். சிவ ஸொத்து எதையும் தெரிந்தோ தெரியாமலோ கொண்டுவரக் கூடாது. ஆலய தீபஎண்ணெயைத்தீண்டலாகாது. அதைத்

தன்மீது தடவிக்கொள்ளக் கூடாது. எந்த மூர்த்தியையும் தொடலாகாது. ஒரு முகூர்த்தத்திற்குமேல் ஆலயத்தில் தங்கக் கூடாது. சிவ நிர்மால்யத்தை உண்பதற்கேற்ற சுத்தி நமக்கில்லாததாலும் அது சண்டிகேசருக்கே சொந்தமானதாலும் சிவனுக்கு நிவேதனம் செய்த அன்னத்தை நாம் புஜிக்கலாகாது. சிவமாலையைச் சூட்டிக்கொள்ளலாகாது. மற்ற தேவர்களது ப்ரஸாதத்தை ஏற்கலாம். காலை கோயில் கதவைத் திறந்தவுடன் தர்சிக்கக் கூடாது. சிவ த்விஜர் ஏதேனும் நிவேத்யம் கற்பூரம் செய்தபிறகே தர்சிக்க வேண்டும். திரை போட்டிருந்தபோதும் வஸ்த்ரமின்றி அபிஷேகம் செய்யும்போதும் தர்சிக்கக்கூடாது. தீபமில்லாதபோதும் தர்சிக்கக்கூடாது.

**महावलि मुखास्सर्वे शिवाज्ञा परिपालकाः**
**मया निवर्तितायूयं गच्छन्तु शिवसन्निधिं ॥**

மஹாபலிமுகாஸ்ஸர்வே ஶிவாக்ஞா பரிபாலகா:
மயாநிவர்த்திதாயூயம் கச்சந்து ஶிவஸந்நிதிம்.

"சிவாக்ஞையை பரிபாலநம் செய்யும் மஹாபலி முதலிய நீங்களெல்லோரும் என்னால் திருப்பப்பட்டவர்களாக சிவ ஸன்னதிக்குச் செல்லுங்கள்" என்ற சுலோகத்தைக் கூறி சிவாலய வாசலில் சிறிது உட்கார்ந்து செல்லவேண்டும். அதிபவித்ரமான சிவாலயஞ் சென்று வீடுவந்தவர் உடனே கால் கழுவக்கூடாது. சிறிது நேரம் உட்கார்ந்தபின் காலலம்பலாம்.

### சிவ கைங்கர்யம்.

காமாந்தன் என்ற வைச்யன் பித்ருஹத்தி மாத்ருஹத்தி ஸுராபானம் தாஸீ கமநம் கொலை கொள்ளை ப்ரும்மஹத்தி முதலிய மஹா பாபங்களைச்செய்தும் ஓர் விநாயகாலயங் கட்டியதால் அடுத்த பிறவியில் ஸோமகாந்தன் எனும் அரசனாகப் பிறந்தான். —(பார்க்கவ புராணம்)

ஓர் குரங்கு பில்வமரத்தை உலுக்க அதிலிருந்து சிவலிங்கத்தின் மீது பில்வம் விழ அதனால் அது முசுகுந்தச் சக்ரவர்த்தி யானது. (ஸ்காந்தம்)



குருத்ரோஹி எனும் வேடன் தற்செயலாக சிவராத்ரியன்று கண்விழித்து ஸ்வயம்பூ லிங்கத்தைக் கல்லெனக் கருதி அதன் மீது கால்வைத்தேறி மிருகங்களைத் தேடத் தழையை உருவி எறிந்தான். அந்தப் புண்யத்தால் கைலாஸஞ்சென்று மறுபிறவியில் வேடராஜனான குஹனாகப் பிறந்தான். (சிவபுராணம் பாத்மம்)

ஆலயத்தில் ஏற்றியிருந்த நெய் தீபத்திலுள்ள நெய்யைப் புஜிக்கக்கருதி ஓர் எலி அதனருகில் செல்ல அதன் முயற்சியின்றியே திரிமீது அதன் கால்பட்டு அணைந்துபோகும் நிலையிலிருந்த தீபம் எரிந்ததால் அது மஹாபலி சக்ரவர்த்தியானது. (வேதாரண்ய ஸ்தல புராணம்)

இங்ஙனம் எண்ணிறந்த கதைகளுண்டு. ஆலயம் அமைத்தல், பழையதைச் சீர்படுத்தல், ஆங்கு தோன்றும் செடிகளைப் பிடுங்கி எடுத்தல், சாணத்தால் மெழுகி பெருக்கிக் கோலமிட்டு தீபம் ஏற்றல், ப்ரதிதிந மாலயஞ் செல்லல், பிரதக்ஷிணம் செய்தல் முதலியவைகளைச் செய்து நாம் நற்கதிபெறல் வேண்டும்.

### கற்பூர தத்துவம்.

தொன்றுதொட்டு நம் நாட்டிலே பூஜையில் கற்பூரமேற்றுவதும் அச்சமயம் தவறாமல் விசேஷமாக ஹரஹர என்று தர்சிப்பதும் அதைக் கண்ணில் ஒத்திக்கொள்வதும் பழக்கமாயிருந்துவருகின்றது. அர்ச்சனை செய்ய முடியாதவர் கற்பூர தீபாராதனையையேனும் செய்வர். அதன் ரஹஸ்ய மென்ன? ஸர்வாபராத க்ஷமாபணார்த்தம் கற்பூர நீராஜநமாம். அதாவது :—தெரிந்தோ தெரியாமலோ சிவபூஜையில் தோன்றும் அபசாரங்கள் அகலவும் பூஜை செவ்வனே நடந்ததாகச் செய்யவும் கற்பூர தீபாராதனை செய்கிறோம். கர்மகாண்டத்தில் ஏதேனும்தவறுதல்கள் நேரக்கூடும் எனக்கருதி கர்மாவுக்குப்பின்னர் ப்ராயச்சித்தஹோமம் ஜயாதி ஹோமம் செய்வதுபோலாமது. "கற்பூரத்தை இரு கரங்களாலும் தொட்டுக் கண்ணில் ஒத்திக்கொண்டால் கண்நோயகன்று நேத்ர ஆரோக்யத்துடன் ஞானக்கண்ணும் உண்டாகும்" என ஆக்நேய புராணங் கூறுகின்றது.

ஸ்ரீராகவன் அஶ்வமேதக் குதிரையைத்தொட்டவுடன் அது உடலை விட்டு திவ்ய சரீரம் பெற்று ராகவனைத் துதித்தது. நீ யாரென்றவர் கேட்க, யானொரு வேதியன். டம்பாசாரமுள்ளவன். வந்த தூர்வாஸரை வரவேற்காமல் வேண்டுமென்று நிஷ்டையி லிருப்பது போல் கண்ணை மூட அவர் என்னை ம்ருகமாக்கி, யான் வேண்டிய பின் உம்மால் நற்கதி என்றார் என்று கூறி ஸ்வர்க்கஞ் சென்றது. இறந்த குதிரையைக் கொண்டு எப்படி யாகம் நடத்துவதென ரித்விக்குகள் தயங்க, அதர்வ நிதியான வஸிஷ்டர் அதற்கு பிரதிநிதி த்ரவ்யமாக கற்பூரத்தை ஏற்ற அமரர் ஆநந்தமடைந்தனர். வேள்வியும் முடிந்தது. (பாத்ம பாதாள கண்டம்.) அஶ்வமேத யாகத்தால் ப்ரும்மஹத்திகூட அகலும் என ஶ்ருதி கூறுகிறது. அதற்கு ப்ரதிநிதி கற்பூரஹார்த்தி எனில் கர்மகாண்ட ரீதியாக நமது பாபங்களை அகற்றவல்லது அது என்பது ஸித்தம். மற்ற எதை எரித்தாலும் அது கரியாகவோ சாம்பலாகவோ நிற்கும். நல்ல கற்பூரம் எரிந்தால் ஒன்றுமில்லாமல் போய்விடும். மற்ற முக்திகளுக்கு அடையாள முண்டு. நீரில் நீர் கலந்தாற் போல் ஜ்யோதிர் வடிவனான பரமனுடன் ஜீவன் இரண்டற ஒன்றாய்க்கலத்தலெனும் முக்திதான் சிறந்தது. ஞாநாக்நியால் நமது வினைகளெல்லாம் எரிந்தபின் சுடருடன் ஜீவன் சுடராகச் சேரும் ஐதிஹ்யமே கற்பூரார்த்தத்தின் உயர்ந்த தத்துவமாம். "அவனே ஒளிக்கெல்லாம் ஒளியளிப்பவன். அவனை விளக்க மற்ற ஒளிகளால் முடியாது" என்பது கற்பூரஹார்த்தியில் கூறும் மந்த்ரார்த்தம்.

### அபிஷேக தத்துவமும் த்ரவ்யமும்.

"அலங்கார ப்ரியன் விஷ்ணு, அபிஷேக ப்ரியன் ஶிவன்" என்பது ஆகமக்கொள்கை. அக்நி ஜலம் முதலியன அவன் ஶரீரமே. நமது தாபத்ரயமகல அவனைக் குளிரச்செய்தால் நம் மநங்குளிரும். ஸதா தாராபிஷேகம் செய்வது உத்தம முறை. நமது சித்த வ்ருத்தியானது ஜலதாரைபோல் ஓயாது இடைவிடாது அவன் திருவடியிலே செல்லவேண்டும். நதிகளெல்லாம் ஸமுத்ரத்தினிடம் விழுந்து (அதற்கிருந்த காவேரி கங்கை என்ற) நாம ரூபமே மாறி (ருசியும் மாறி) ஒரே ஸமுத்ரமாவதுபோல் "பரமனிடம் ஜீவன் சேருதல்" என்று உபநிஷத் கூறும் தத்துவம் போல் நாமங்கு லயமாதல் அவஶ்யம் என்ற பல தத்துவங்களை அபிஷேகங் குறிக்கும்.



ஜலாபிஷேகத்தால் சாந்தியும் வாஸனாத்ரவ்யத்தால் ஆயுளும், சந்தனத்தால் ஸம்பத்தும் உண்டாகும். தூபம் பாபத்தை அகற்றும். தீபம் மரணத்தை அகற்றும். நைவேத்யம் ராஜ்யத்தை அளிக்கும். பழம் தாம்பூலம் அநந்த புண்யமளிக்கும். அக்ஷதை சத்ருவை அகற்றும். தூர்வை ப்ராத்ருவதாதி பாபத்தைஅகற்றும். தும்பைப்பூ கோவத பாபத்தையும், கொன்றை மாத்ருஹத்தியையும் அகற்றும். வெள்ளெருக்கு வேண்டியதை அளிக்கும்" (சிந்த்யாகமம்.)

வாஸனைத்தைலம் பஞ்சகவ்யம் பஞ்சாம்ருதம் பால் தயிர் நெய் தேன் கரும்புச்சார் பழச்சார் இளநீர் சந்தநம் கலச தீர்த்தம் ஆக 12. இது ஓர் முறை. எண்ணை, மாவு, நெல்லிக்காய் பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாம்ருதம், பால், தயிர், நெய், தேன், கரும்புச்சார், பழச்சார், இளநீர், சந்தநம், தாரா கலசம், சங்கம் ஆக 16. மற்றோர் முறை. செவ்விளநீர், அந்நம், பழவர்க்கங்கள், சததாரை, ஸஹஸ்ர தாரை, சர்க்கரை முன்கூறியதுடனிவைகளைச் சேர்த்து 22 த்ரவ்யா அபிஷேகம் என்பது ஓர் முறை.

**अभ्यंगपिष्टामलकादिगव्य पंचामृत क्षीरदधीनि सर्पिः ।**
**मध्विक्षसारंफल नालिकेर सुगन्ध धारास्नपनंच शांखं ॥**
**(शिवार्चनचन्द्रिका)**

அப்யங்கபிஷ்டாமலகாதிகவ்ய பஞ்சாம்ருத க்ஷீர
ததீநிஸர்ப்பி: |
மத்விக்ஷஸாரம் பல நாளிகேர ஸுகந்த தாராஸ்ந-
பநம்ச ஶாங்கம் ||
—ஶிவார்ச்சந சந்த்ரிகா.

### பஸ்ம ருத்ராக்ஷ பஞ்சாக்ஷரீ மஹிமை.

பஸ்மோத்தூளித விக்ரஹ: என்ற நாமாவில் சிறிது இதன் பெருமை கூறப்பட்டிருக்கிறது. ஶிவனே இதை அணிந்துள்ளானெனின் இதன் பெருமையை விளக்க வேறேதேனுங் கூறவேண்டுமா?

காஶ்மீர ராஜனது புரோஹிதர் ஸுதர்மா என்பவர் வித்யாகர்வத்தினால் எல்லோரையும் அவமதித்து, ப்ரும்மாவினால் ஊமையாகும்படி சபிக்கப்பட்டார். அவர் ஸஹோதரர் விசுத்தர் மஹாவிஷ்ணுவை அவமதித்து கை கால் குறையும்படி சாபம் பெற்றார். அரசன் இவர்களுடன் கேதாரேஶ்வரம் சென்று ததீசி எனும் சாம்பவரை வணங்க அவர் விபூதியின் பெருமையைக் கூறி இருவரையும் அணிந்துகொள்ளும்படிக்கூறி சாபத்தை அகற்றினார். (ஸ்காந்தம்-உபதேஶ காண்டம்). விபூதி அணியாதவரை மூதேவி அண்டுவள். ஆதலின் ஸதா, விசேஷமாக ஶிவாலயம் செல்லுகையில், அதைக் கீழே சிந்தாமல், சிந்தும் பஸ்ம தன் உடல்மீதே விழும்படி அண்ணார்ந்து பஞ்சாக்ஷரீ அல்லது குரு கூறிய மந்த்ரத்துடன் பஸ்மம் அணிய வேண்டும்.

ருத்ராக்ஷ என்ற சொல்லுக்கு ருத்ரனது கண் என்று பொருள். ருத்ரனது கண் ஜலம் விழுந்தவிடத்திலிருந்து இது தோன்றியதால் இதற்கும் ருத்ராக்ஷம் என்று பெயர். இது ஒரு முகம்முதல் 21 முகம்வரை அமைந்துளது. அதை மாலையாகக் கழுத்திலணிந்து விபூதியுடன் சிவ தர்சநம் செய்ய வேண்டும். இவ்விரண்டும் ஶிவ சின்னமாம். அதை அணிந்தால் தான் நந்தி மஹாபலி சண்டேசர் முதலிய ஶிவ கணங்கள் நமக்குச் ஶிவ தர்சநம் செய்து வைப்பர்.

கோஸலதேசத்தில் குணநிதி என்றோர் ப்ராமணன் குரு பத்நீ கமநம் செய்து குருவையும் பிதாவையுங் கொன்றான். பிறகு திருடனாகிப் பல தீய கார்யங்களைச் செய்து காட்டில் அநாதையாக இறந்தான். அவனுக்குப் பத்து முழம் தூரத்தில் ஓர் ருத்ராக்ஷமிருந்ததால் அந்த புண்யத்தால் இவன் பாபங்களை க்ஷமித்து ஶிவன் கைலாஸ மளித்தார் (தேவீ பாகவதம் 11-ஸ். 6-அத்). இங்ஙனம் ஸ்காந்தம் கூர்மம் பாத்மம் முதலிய புராணங்களில் ருத்ராக்ஷ மஹிமையைக்கூறி பல கதைகளிருக்கின்றன. அஃதெல்லாம் ஒருவாறிருக்க சுத்த ருத்ராக்ஷத்தை ஸதா தரித்திருந்தால் அது உடலிலுள்ள நோயை அகற்றுகிற தென்பது ஆயுர்வேதத்தின் கூற்றாம்.



பல்கிட்டிய ஜன்னியில் அஸல் ருத்ராக்ஷத்தைத் தேனில் தேய்த்துக் கொடுப்பது நம் நாட்டுப் பண்டைய வைத்ய வழக்கமாகும்.

**பஞ்சாக்ஷரீ** எனில் ஐந்தெழுத்துள்ள மந்த்ரம் என்று பொருள். சிவன் பெருமையைக் கர்மகாண்ட ஞாந காண்ட வடிவமான வேதமெல்லாம் வர்ணிக்கிறது. அதிலும் யஜுர்வேதம் நாலாம் காண்டம் ஐந்தாம் ப்ரஶ்நமெனும் ஸ்ரீ ருத்ர மல்லது ஶதருத்ரீய மென்பது பூர்ணமாக சிவன் பெருமையையும் அவதாரங்களையும் வர்ணிக்கின்றது. அதனிடையிலே இந்த பஞ்சாக்ஷரீ எனும் மஹா மந்த்ரமமைந்துளது. அந்த மந்த்ரத்தை ஜபிக்காத ஆண்மக்களையோ பெண்மக்களையோ பண்டைய காலத்தில் காண்பதரிது. அந்த ஜபமில்லாதவர் தேவ பூஜைக்கோ பித்ரு ஶ்ராத்தத்திற்கோ பாகம் செய்யக்கூட அநர்ஹர். அவர் கையால் சிஷ்டர் தீர்த்தங்கூட அருந்தார்.

பாடப தேசத்தில் தர்மன் சந்த்ரஸேநன் என இரு ப்ருப்மசாரிகள் குருகுலத்தில் வித்யாப்யாஸம் செய்தனர். சந்த்ரஸேனன் ஸன்யாஸத்தில் அவா கொண்டு வீட்டைவிட்டுத் துறவியானான். அதைக்கண்டு தர்மனும் துறவியாகத் துடித்தான். இதைக்கண்டு அவன் தந்தை வருந்த, ப்ருகு எனும் மாமுநி அவனுக்குப் பஞ்சாக்ஷரீ உபதேசித்து இதனால் புக்தியும் முக்தியும் பெறலாமென்றார். பல்லாண்டு பக்தியுட னதை ஜபித்து வரும்போது பழய நண்பன் துறவி இவனருகே வந்து தனது ஸன்யாஸ தர்மத்தால் இந்த்ரனை அழைத்து அவனுக்குப் பூஜைசெய்தனுப்பினான். தர்மன் பஞ்சாக்ஷரீ பலத்தால் ப்ரும்மனை அழைக்க அவர் வந்து தர்மனைப் பூஜித்துச் சென்றார். இதைக்கண்டு எல்லோரும் வியந்து துறவைவிட பஞ்சாக்ஷரியே பெரிதெனக் கொண்டாடினார்கள். (ஸ்காந்தம் உபதேசகாண்டம் 21 அ.) காசீகண்டம் தேவீ பாகவதம் பாத்மம் ஸூதஸம்ஹிதை முதலிய புராணங்களில் பஞ்சாக்ஷரீ மஹிமை வர்ணிக்கப்படுகிறது.

## முடிவுரை.

அர்ச்சாவதாரமாகத் தோன்றிய ஆலய விக்ரஹங்கள் ஒரு கையைக் கீழே காட்டி மற்றொரு கையால் அபய முத்ரையைத் தரிக்கும். பாதாரவிந்தத்தில் பணிந்தால்

உயர் ஸுகம் பெறுவாய் என்பது அதன் பொருள். குரு அல்லது பெரியோர்களுக்கு நமஸ்கரிப்பவர் அவர் கால்களைத் தொடவேண்டும், அர்ச்சனைகள் பாதாரவிந்தத்திற்கே யன்றி முகாரவிந்தத்திற் கல்ல. ஆதலால் எப்போதும் முதலில் தேவதைகளுடைய பாதாரவிந்தத்தைத் தர்சிக்கவேண்டும். ஸ்மரிக்கவேண்டும். தேசிகர் பாதுகா ஸஹஸ்ரமும் மூககவி பாதாரவிந்த ஶதகமும் இயற்றி அந்த பெருமையை விளக்கினார்கள். ஸ்ரீவைஷ்ணவ ஆலயத்தில் ஸாதிக்கும் சடாரியில் ஸ்ரீ பாதங்களையே காண்கிறோம். பால முகுந்தனும் கராரவிந்தத்தால் பதாரவிந்தத்தை முகாரவிந்தத்தில் வைத்து அதன் ரஸத்தை உலகிற்கு எண்பிக்கிறார். சிவனடியையே தேடிச்சென்ற விஷ்ணு அதைத் தர்சிக்காவிடினும் பெருமை பெற்றார். கண்ணன் காலடியே வீற்றிருந்த அர்ஜுனனுடனவர் சேர்ந்தார். தலையருகே இருந்த துர்யோதநனுக்கு அருள்புரியவில்லை. ஆதலின் எப்போதும் தேவ குரு பாதார விந்தங்களையே த்யாநம் செய்யவேண்டும். குரு பாதுகா பூஜை தாந்த்ரிகரது முக்ய பூஜயாம். சிவலிங்கம் ஆவடையார் அல்லது பீடமாக உள்ளது. ப்ரக்ருதி அல்லது மஹாவிஷ்ணுவாம். ப்ரக்ருதியும் விஷ்ணுவும் ஒன்றே என்பது சாஸ்திர ஸித்தாந்தம். ஆதலின் அவரவர் குரு உபதேசப்படி ஆவடையார் மீதுள்ள சிவலிங்கத்தை உட்கார்ந்த கோலமாகவோ நின்ற கோலமாகவோ பஞ்சமுகங்களுடன் தர்சிக்கவேண்டும். அவரது பாதார விந்தத்தைத் தவறாது த்யாநிக்கவேண்டும்.

**मृत्युमिच्छतिनकोपि भूतले मृत्युरप्यथ न कंच मुञ्चति ।**
**चिन्तयन्तिय इहान्तकान्तक हन्तचिन्तयति नान्त कोपितान् ॥**

ம்ருத்யுமிச்சதிநகோபி பூதலே ம்ருத்யுரப்யத
ந கஞ்ச முஞ்சதி
சிந்தயந்திய இஹாந்தகாந்தக ஹந்தசிந்தயதி
நாந்த கோபிதான்.

புவியில் எவரும் எமனை விரும்புவதில்லை. அவனும் ஒருவரையும் விடுவதில்லை. ஆனால் அந்தகனுக்கு யமனான சிவனை எவன் நினைக்கிறானோ அவனை யமன் நினைப்பதில்லை.



ஆதலால் அகால ம்ருத்யுவோ கால ம்ருத்யுவோ ஸம்ஸார ம்ருத்யுவோ எவருக்கு வேண்டாமென தோன்றுகிறதோ அவர் கால காலனைக் கைலாஸ நாதனை நினைக்க வேண்டும். சிவபூஜை செய்ய இயலாதவர் சிவாலய தர்சநமேனும் விதிப்படி செய்யவேண்டும். அதுவுமியலாதவர் சிவநாமோஷ்டத்தரசதத்தையேனும் ஸதா பாராயணம் செய்யவேண்டும். அதுவுமியலாதவர் சிவனது எட்டு நாமாக்களையேனும் ஜபிக்கவேண்டும். அதுவுமியலாதவர் விபூதி ருத்ராக்ஷமணிந்து சிவ சிவ என ஸதா கூறவேண்டும்.

சிவ சிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ வென்னச் சிவகதி தானே.

(நந்தியினவதாரமான திருமூலநாயனார்.)

**आवाहनं न जानामि न जानामि विसर्जनं ।**
**पूजाविधिं न जानामि क्षमस्वपरमेश्वरः ॥**

ஆவாஹநம் நஜாநாமி நஜாநாமி விஸர்ஜநம் ।
பூஜாவிதிம் நஜாநாமி க்ஷமஸ்வ பரமேஶ்வர: ॥

ஓம் தத்ஸத் சிவார்ப்பணமஸ்து.

## ஸ்துதிகள்.

நந்திகேச மஹாப்ராக்ஞ சிவத்யான பராயண
மஹாதேவஸ்ய ஸேவார்த்தம் அநுக்ஞாம் தாது மர்ஹஸி.

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபல ஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஶ்வர பாத பங்கஜம்.

ஷடானனம் குங்கும ரக்த வர்ணம்
மஹாமதிம் திவ்யமயூர வாஹனம்
ருத்ரஸ்ய ஸூனும் ஸுரஸைன்ய நாதம்
குஹம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே.

ஸர்வ மங்கள மாங்கள்யே ஶிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரியம்பிகே தேவி நாராயணி நமோஸ்து தே.

வனமாலீ கதிசார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகீ
ஸ்ரீமான் நாராயணோ விஷ்ணு: வாஸுதேவோ அபிரக்ஷது.

நம: ஶிவாப்பாம் நவ யௌவனாப்யாம்
பரஸ்பராச்லிஷ்ட வபுர் தராப்யாம்
நகேந்த்ர கன்யா வ்ருஷகேதனாப்யாம்
நமோ நம: ஶங்கர பார்வதீப்யாம்.

க்ருபா ஸமுத்ரம் ஸுமுகம் திரிநேத்ரம்
ஜடாதரம் பார்வதீ வாமபாகம்
ஸதாஶிவம் ருத்ரம் அனந்த மூர்த்திம்
ஶிவசிதம்பரேசம் ஹ்ருதி பாவயாமி.

சித்ரம் வடதரோ: மூலே வ்ருத்தா: சிஷ்யா: குரு: யுவா.
குரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்து
சின்ன ஸம்சயா:

கட்கம் கபாலம் டமரும் த்ரிசூலம்
ஹஸ்தாம்புஜே ஸந்ததம் த்ரிநேத்ரம்
திகம்பரம் பஸ்ம விபூஷிதாங்கம்
நமாம்யஹம் பைரவம் இந்து சூடம்.

அன்ன பூர்ணே ஸதா பூர்ணே சங்கர ப்ராண வல்லபே
ஞான வைராக்ய ஸித்யர்த்தம் பிக்ஷாந்தேஹி மே பார்வதி.

மாதா ச பார்வதீ தேவி பிதா தேவோ மஹேச்வர:
பாந்தவா: ஶிவபக்தா: ச ஸ்வதேசோ புவனத்ரயம்.

# ஸ்ரீ ஸப்தகிரி புக் சென்டர்

ராமேஸ்வரம் ரோடு,
தி.நகர், சென்னை-600 017.

அனைத்து விதமான தமிழ் ஸம்ஸ்கிருதம்
ஆங்கில தெய்வீக புத்தகங்கள் கிடைக்கும்.